விடுதலைப்புலிகள்

UNIVERSITY OF JAFFNA LIBRARY


03 செத்தவர் செருப்பிற்காக ...
05 ஆனையிறவும் வலுச்சமநிலையும்...
08 இடப்பெயர்வும் ஈழத்தமிழர்களும்.
10 போர்க்களத்து விதிகள்.


குரல் – 108 பங்குனி – சித்திரை, 2003 அன்பளிப்பு : 10/=

# அரசின் செயல்விருப்பின்மை பேச்சை மோசமாக பாதிக்கும்

**புலிகள் இயக்கத்திற்கும் - சிங்கள அரசாங்கத்திற்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு 15 மாதங்கள் பூர்த்தியாகிவிட்டன.**

**அத்துடன் இந்தக் காலப்பகுதியில் ஆறு தடவைகள் இருதரப்பினர்க்குமிடையே வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டுள்ளன.**

**போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் - பேச்சுவார்த்தைகளிலும் எத்தனையோ விடயங்கள் இணக்கம் காணப்பட்டு - செயற்படுத்தப்படும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.**

**எனினும், இன்றுவரை இவை ஏட்டளவிலேயே இருந்து வருகின்றன. இவற்றை பூரணமாக அமுல்படுத்தி சமாதான முயற்சிகளை வலுப்படுத்தி - வளர்த்துச்செல்ல சிங்கள அரசு தவறிவருகின்றது.**

இராணுவ முகாம்களை இடம்மாற்றி மக்களின் மீள்குடியேற்றத்திற்கு இடமளிப்பதென்பது இன்னமும் எட்டாக்கனியா...வே இருந்து வருகின்றது.

குடாநாட்டின் 30 சதவீதமான நிலப்பகுதி சமாதானக் காலத்திலும் ஆக்கிரமிப்பு வலயமாகவே காணப்படுகின்றது. குடாநாட்டின் வளம்மிக்கதும் - சனச்செறிவு மிக்கதுமான இப்பகுதிவாழ்மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாம் வாழ்க்கையில் கிடந்து அல்லலுறுகின்றனர்.

இந்தமக்களின் மனிதாபிமானப் பிரச்சனைகளைக் கவனத்தில் எடுக்க அரசாங்கம் மறுக்கின்றது. பதிலாக, தனது அரசின் இராணுவ நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து சமாதான முயற்சிகளுக்குச் சாவுமணி அடிக்க சிங்கள அரசு முனைகின்றது.

இந்த சமாதான காலத்தில் புலிகள் இயக்கம் போதியளவுக்கு நல்லெண்ணச் செயற்பாடுகளையும் சமிக்கைகளையும் காட்டி வருகின்றது.

அரசுடன் இணக்கம் கண்ட அனைத்து விடயங்களையும் புலிகள் இயக்கம் பூரணமாகவே அமுல்படுத்தி - முன்னுதாரணம்காட்டி வருகின்றது. தென் இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள இயல்பு வாழ்க்கைக்கும் - பொருளாதார அனுகூலங்களுக்குமான கீர்த்தி புலிகள் இயக்கத்தையே சாரும். சமாதான காலத்தில் சிங்கள மக்கள் அனுபவிக்கும் நன்மைகள் பல உண்டு.

ஆனால், தமிழ்மக்களுக்கெதிராக சிங்கள ஆட்சியாளர்களால் காட்டப்பட்டுவரும் வரலாற்றுப் பாரபட்சம், சமாதானச் செயற்பாடுகளிலும் காட்டப்படுகின்றன. இதனால் சமாதான கால நன்மைகள் தமிழ் மக்களிடம் சென்றடையவில்லை.

பேச்சுவார்த்தையின் சமபங்காளியான சிங்கள அரசு தனது பங்காளி மனநிலைக்குப் பதிலாக, வழமையான மேலாதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்தி வருகின்றது.

தமிழ்மக்களின் பிரச்சனைகளை மனிதாபிமானக் கண்கொண்டு பார்த்து - அரசியல் வழிமுறையில் சிந்திப்பதற்குப் பதிலாக தொடர்ந்தும் இராணுவ வழிமுறையிலேயே சிந்திக்கவும் - செயற்படவும் சிங்கள அரசு முனைகின்றது.

முன்னர், போர்க்களத்தில், புலிகளின் கடற்போக்குவரத்து தங்குதடையின்றி வடக்கிற்கும், கிழக்கிற்குமாக நடந்து வந்தது. சிங்கள கடற்படையின் கண் முன்னாலேயே ஒரு பாரிய கடல்வழி தரையிறக்கத்தை நடாத்திய கடற்புலிகள், ஆனையிறவுத் தளத்தின் ஆணிவேரை வெட்டியெறிந்து - அதன் வீழ்ச்சிக்கு வழிவகுத்து ஒரு புதிய இராணுவ வரலாற்றை படைத்திருந்தார்கள்.

அத்தகைய செயற்திறனுள்ள கடற்புலிகள் இன்று சமாதானக்

(02ம் பக்கம் பார்க்க)



**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோஷிங்டன் மாநாடு — பேச்சுவார்த்தையில் ஒரு பாரபட்சம்

எதிர்வரும் யூன்மாதம் இலங்கைக்கு உதவிவழங்கும் உலக நாடுகளின் மாநாட்டிற்கு உதவும் வகையில், அமெரிக்காவில் நடைபெற்ற பூர்வாங்க மாநாட்டில் கலந்துகொள்ள புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படாமையை புலிகள் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

வேண்டுமென்றே புலிகள் இயக்கத்தை ஓரங்கட்டச்செய்த அரசியல் சதிதான் இந்தப் புறக்கணிப்பு என்பது புலிகளின் நிலைப்பாடாகும்.

கடந்த 15மாத காலமாக சமாதான முன்னெடுப்புக்களில் புலிகள் இயக்கம் காட்டிவந்த நேர்மையானதும் – உண்மையானதுமான அரசியல் உறுதிப்பாட்டை ஏளனம் செய்வதுபோல் இந்தப் புறக்கணிப்பு முடிவு அமைந்துள்ளது.

புலிகளைப் புறந்தள்ளிவிட்டு இந்த முக்கிய மாநாட்டை நடத்த சிறிலங்கா அரசாங்கமும் – அநுசரணையாளரான நோர்வே அரசும் முடிவெடுத்தது பொறுப்புணர்ச்சியற்ற ஒரு அரசியல் முடிவா கும்.

இது, இலங்கைத்தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் அரசியல்தீர்வு தேடும் உண்மையான ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையா! அல்லது புலிகளுக்கெதிரான வேறொரு நிகழ்ச்சி நிரலைக்கொண்ட ஒரு அரசியல் சதியா! என்ற நியாய பூர்வமான சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.




புலிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவதற்கு சட்டபூர்வமான தடங்கல்கள் உள்ளதெனத் தெரிந்திருந்தும் இந்த முக்கிய மாநாட்டை அமெரிக்க நகரில் நடாத்த நோர்வே அரசு ஏன் தீர்மானித்தது?

சமாதான முயற்சியின் சமபங்காளியான விடுதலைப்புலிகள் இயக்கம் கலந்துகொள்ள முடியாத இந்த மாநாட்டில் ஒரு தரப்பாகக் கலந்து கொள்ள சிறிலங்கா அரசு எவ்வாறு முடிவெடுத்தது?

அல்லது, தமிழ்மக்கள் அஞ்சுவதுபோல சிறிலங்கா அரசும் – நோர்வே அரசும் இணைந்து புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு ஆழமான அரசியல் சதியை அசிங்கமான உள்நோக்கத்துடன் அரங்கேற்றியுள்ளனவா?

இத்தகைய துரோகத்தனமான முடிவை இவ்விரு நாடுகளும் மேற்கொள்ளும் அளவிற்கு சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் எந்த வகையில் மோசம் செய்தார்கள்?

புலிகள் இயக்கமும் – தமிழ்மக்களும் விடையறிய ஆவலாயுள்ள வரலாற்று வினாக்களே இவையாகும்.

சிங்கள அரசாங்கத்திற்கும் – விடுலைப்புலிகள் இயக்கத்திற்குமிடையே போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி மாதங்கள் பதினைந்து கடந்துவிட்டன. இந்தக் காலப்பகுதியில், சமாதானத்தின் பெயரால் புலிகள் இயக்கம் எத்தனையோ விட்டுக்கொடுப்புக்களை பொறுமையுடன் செய்துள்ளது என்பது பகிரங்க உண்மையாகும்.

சிறிலங்கா அரசு உடன்பட்டதுபோல மக்கள் வாழிடம் – கோவில்கள் – மற்றும் பொது இடங்களில் இருந்து படையினர் விலக்கப்பட்டு அங்கே மீள்குடியேற்றம் இன்றுவரை நடைபெறவில்லை.

உடன்பாடு காணப்பட்டு மூன்று மாதங்களுக்குள் இவை அனைத்தும் நடைபெற்றுவிடும் என்று உறுதியளித்திருந்தது. பதினைந்து மாதங்கள் கடந்த நிலையிலும் அவை பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை.

இந்த விடயத்தில் சிங்கள அரசின் நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்துகொண்ட புலிகள் இயக்கம் பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுப்புக்களைச் செய்து – தாராளமாகக் கால அவகாசங்களையும் வழங்கி வந்தது. ஆயினும், உடன்படிக்கையை பூரணமாக செயற்படுத்த சிங்கள அரசு இன்றுவரை முன்வரவில்லை.

இதுபோல, போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் சிங்களக் கடற்படை கடற்பரப்பில் நடாத்திய அடாவடித் தனங்களால் 14 விடுதலைப் போராளிகள் வீரச்சாவடைந்திருந்த நிலையிலும் சமாதான முன்னெடுப்புக்களுக்குப் பங்கம் ஏற்படாத வகை யில் புலிகள் இயக்கம் பொறுமை காத்தது.

தமிழர் நிலத்தில் முழுமையான இயல்பு நிலை தோன்றும்வரை அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவதில்லை என்ற முன்னைய முடிவிலிருந்து புலிகள் இயக்கம் இறங்கி வந்து அரசியல் தீர்வு தொடர்பான தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி – பேச்சுவார்த்தையை உயர்ந்த கட்டத்திற்கு நகர்த்தி சமாதான முயற்சிகளில் நெகிழ்ச்சிப் போக்குகளை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு, சமாதானப் பேச்சுக்களின் இன்றைய வளர்ச்சிக்கும் – உறுதிக்கும் புலிகள் இயக்கத்தின் பங்களிப்பே அதிகளவில் உள்ளதெனலாம்.

சமாதானப் பேச்சுக்களின் உண்மைநிலை இவ்வாறிருக்க, பேச்சு . அநுசரணையாளரான நோர்வே அரசும் – சிங்கள அரசும் ஒன்றிணைந்து – புலிகளை முழுமையாக ஓரங்கட்டிவிட்டு – 'வோஷிங்டன்' மாநாட்டை நடாத்தி முடித்திருப் பது இந்த நாடுகளின் நேர்மையையும் – உண்மையையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

இத்தகைய அரசியற் சூழலில், தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் புலிகள் இயக்கம் பங்கெடுப்பது அர்த்தமற்றதொன்றாகின்றது.

எனவேதான் பேச்சுவார்த்தைகளில் தான் பங்குபற்றுவதை இப்போதைக்கு இடைநிறுத்த புலிகள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

சிங்கள அரசு தான் உடன்பட்டதற்கிணங்க மக்கள் வாழிடங்கள் – கோவில்கள் – பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து படையினரை காலதாமதமின்றி விலக்கி சமாதானத்திற்கு முன்னே உள்ள தடையை அகற்ற முயலவேண்டும்.

இந்த சமாதானத் தேக்கத்திற்கு புலிகள் இயக்கம் எந்த வகையிலும் பொறுப்பல்ல. சிங்கள அரசும், அநுசரணையாளர் நோர்வே அரசும்தான் இத்தேக்க நிலைக்குத் தீர்வு கண்டாக வேண்டும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியானதும் – கௌரவமானதுமான அரசியல் பேச்சுக்கள் மூலமாக, அமைதி வழியில் அரசியல் தீர்வு தேடும் நோக்குடன் இந்த நாடுகளின் அரசுகள் நேர்மையாகவும் – உண்மையாகவும் உழைக்கவேண்டும் என்பதே தமிழ்மக்களினதும் – புலிகள் இயக்கத்தினதும் விருப்பமும் – எதிர்பார்ப்புமாகும். ●

01ம் பக்கத் தொடர்ச்சி.....

காலத்தில் தரையில் முடங்கிக் கிடக்கவேண்டும் என்று சிங்கள அரசு விரும்புகின்றது.

கடற்புலிகளின் கடற்போக்குவரத்தை சரியான முறையில் வரையறுக்க சிங்கள அரசு தொடர்ந்தும் பின்னடித்து வருகின்றது. இதனால் கடற்புலிகளின் கடற்போக்குவரத்து மற்றும் கடல்சார் செயற்பாடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன. சமாதானத்தின் பெயரால் இத்தகைய பாதிப்புகளைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

தமிழ்மக்களின் புனர்வாழ்வு - புனர்நிர்மானம் போன்றவற்றை செயற்படுத்தவென பல மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பு இன்னமும் இயங்கத்தொடங்காமல் உள்ளது. அதற்கான நிதியம் ஒன்றை ஆரம்பிக்க இருதரப்பும் இணக்கப்பாடும் கண்டிருந்தனர். இந்நிதியம் வட - கிழக்கிற்கான மீள்கட்டுமான நிதியம் (NERF) என்ற பெயரில் உலக வங்கியின் பொறுப்பில் (காப்பாளராக) செயற்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்நிதியத்தை வெற்றிகரமாகச் செயற்படவைத்து வட - கிழக்கின் அவசர மனிதாபிமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச்செல்ல முடியாதவாறு இலங்கை அரசு பல தடைகளை ஏற்படுத்தி, சட்டச் சிக்கல்களை சாட்டாகக் காட்டி இழுத்தடித்து 'சிரான்' இன் செயற்பாட்டை செயலிழக்கச்செய்யும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

இந்த சமாதானக் காலத்தில் சிங்களப் படைகள் எமது மக்கள்மீது பல கொலைத் தாக்குதல்களை நடாத்திவிட்டன. சமாதான விதிகளை மதித்து நடந்த கடற்புலிகள் மீது கொலைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது. அவர்களது கப்பல்களை மூழ்கடித்துள்ளது. புலிவீரர்களை அவமானப்படுத்தியும் - தாக்கியும் படைகள் பல அட்டூழியங்களைப் புரிந்திருந்தனர்.

இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களையும் சகித்துக்கொண்டு புலிகள் இயக்கம் சமாதான முன்னெடுப்புக்களுக்கு தீங்கு நேர்ந்துவிடாமல் பார்த்துக்கொண்டது.

ஆயினும், சிங்கள அரசு இவற்றை நிவர்த்தி செய்து சமாதானப் பேச்சுக்களில் புலிகளையும் ஆர்வமுடன் செயற்படச் செய்விக்கத் தவறிவருகின்றது.

இத்தகைய செயலின்மைகளை சிங்கள அரசாங்கம் திருத்திக்கொண்டு - சமாதான முயற்சிக்கு புத்துயிர் ஊட்ட ஒரு கால அவகாசத்தை வழங்கும் நோக்குடன் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்துவது என்ற முடிவை புலிகள் இயக்கம் எடுத்திருந்தது.

அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்களும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் இவைதொடர்பாக அரசாங்கத்திற்கு எழுதிய விரிவான கடிதங்களுக்கு ஒரு ஆக்கபூர்வமான பதில் கிடைக்குமென்று புலிகள் இயக்கம் எதிர்பார்த்தது.

ஆனால், புலிகளின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப அரசின் பதில் ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. இதில் மேற்கொண்டு அரசை நிர்ப்பந்திக்கும் முயற்சிகளை நோர்வே - ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் எடுத்துள்ளன. இதிலிருந்து கிடைக்கும் விளைவுகளைப் பொறுத்தே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் தங்கியிருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செத்தவர் செருப்பிற்காக காத்திருப்பவர்கள்" - II

தற்போது அரசியல் நிலைமைகள் தீவிரமடையத் தொடங்குகின்றன. விடுதலைப் புலிகளின் அண்மைக்கால முடிவுகள் சருவதேசமெங்கும் பெருத்த உணர்வலைகளை ஏற்படுத்துகின்றன. சிங்களதேச அரசியலிலும் பல்வகை மாற்றங்கள் நடைபெறப்போவதற்கான அறிகுறிகள் தெளிவாகவே தெரிகின்றன. தென்னாசியப் புவிசார் அரசியலில் மாற்றங்களை விரும்புவோரும், விரும்பாதோருமென மெலிதான பிரிகோடுகள் புலப்படுகின்றன. இவையாவும் அமைதிவழியில் இணக்க மான முறையில் சிக்கல்களை தீர்க்கும் புலிகளின் வழிமுறைக்கு ஒன்றில் ஆதரவாகவோ அல்லது எதிர்ப்பு நிலையெடுப்பதாகவோ அமைவதே இங்கு நாம் கவனிக்கத்தக்கது. இந்நிலையில் எப்போதும் விழிப்புடனிருப்பதே விடுதலைக்கு போராடுவோரின் முதற் பணியென வரலாற்றன்னை தரும் அறிவுரையை நாமும் மனதிற் கொள்கின்றோம். எம் மக்களையும் மனம் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சிங்கள தேசத்தில் இன்று வெகுவிரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் (சி.சு.க) மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி-ம.வி.மு.) இடையில் ஏற்படப் போகும் உடன்பாடு பற்றியே முதன்மைக் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் சிங்கள தேச அரசியலில் இதுவொன்றும் புதிய நிகழ்வல்ல. 1951-ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே. க)யிலிருந்து விலகி பண்டா சி.சு.கட்சியை ஆரம்பித்த காலம் தொட்டு இடதுசாரிகள் எனப்படுவோரோடு கூட்டணிகள் அமைப்பது இவர்களுக்கு வழமையாகிப் போனது. 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஒன்பது இடங்களையே பெற்ற பண்டா 1956-மேயில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்காக உருவாக்கிய கூட்டே எம்.ஈ.பி (M.E.P) எனப்படும் மக்கள் ஐக்கிய முன்னணியாகும். அன்றுதொட்டு இம்மூன்று சொற்களை வெவ்வேறு விதமாக பயன்படுத்தியே சி.சு.கட்சி அரசியல் வணிகம் செய்து வருகின்றது. இலங்கையின் இடதுசாரிகளின் தந்தையெனப்படும் பிலிப் குணவர்த்தனாவின் V.L.S.S.P கட்சியோடும் W.தகநாயக்காவோடும் வைத்த கூட்டின் பயனாக அத்தேர்தலில் 39.5 விழுக்காட்டு வாக்குகள் பெற்று 51 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைக்க முடிந்தது. அதுமட்டுமன்றி இத்தகைய உத்தியோடு நுணுக்கமாக இனவெறியை விதைத்து வெல்லும் உத்தியும் பண்டாவாலே தொடங்கப்பட்டது. இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் சிங்களம் மட்டும் கூக்குரல் அவரை பதவியேற்றியது. அப்போது நிபந்தனையுடனான ஆதரவை அவருக்கு வழங்க முன்வந்ததன் மூலம் இடதுசாரிகள் என்கிற சொல்லிற்கே இழுக்குத்தேடின L.S.S.P (ல.ச.ச.க), C.P (க.க) ஆகிய கட்சிகள். இதன்பின் நடந்ததென்ன? 1959-ஆம் ஆண்டளவில் கட்சியின் பிற்போக்குவாதிகள் அழுத்தம் காரணமாக பிலிப்பை அரசிலிருந்து வெளியேற்றி அவரது அரசியல் வாழ்வை பெரும் விபத்திற்குள்ளாக்கி அவரது கதையை முடித்தார் பண்டா. அன்று தொடங்கிய இக்கதை இன்று வரைதாய் மகள் என அச்சொட்டாக பின்பற்றப்படுவதாலேயே "பண்டா குடும்பம் போல் உண்டா உலகில்?" என நாம் கேள்வி எழுப்பினோம்.









"எனவே இப்பொழுது மகளின் முறை. 1994ஆம் ஆண்டு பொதுசன முன்னணியென்கிற பெயரில் பெரும் கூட்டமைத்து 17வருட ஐ.தே.கட்சியின் அழிவாட்சிக்கு முடிவு காண்பதாகக் கூறி வென்றார். வென்றபின் அனைத்து கூட்டுக் கட்சிகளின் சாட்சியாக தமிழ்மக்களை வெட்டிச் சாய்த்தார். தலைவரின் காலமும் மனித ஆற்றலும் சேர்ந்த வீரியத்தின் முன் தோற்றுப்போனார். 2001-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இத்தோல்வி எதிரொலித்தது. செய்ய எதுவுமற்ற நிலையில் தேர்தல் முடிவுகளை மீளவும் நோக்கினார். ம.வி.முன்னணியின் வருகை தேர்தல் சமநிலையை குழப்புவதை உணர்ந்தார். மூன்றாவது சக்தியாக வளரும் ம.வி.முன்னணியின் வளர்ச்சியை மழுங்கடித்து எதிர்கால எதிரியை மடக்கவும் தமது குடும்ப மரபான உத்தியினடிப்படையிலும் அடுத்த கூட்டிற்கு அவர் ஆயத்தமாகின்றார்."

**க.வே.பாலகுமாரன்**

இப்பொழுது தாயின் முறை. 1960-ஆம் யூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான சி.சு.கட்சியோடு ல.ச.ச.கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் தேர்தல் உடன்பாட்டிற்கு வந்தன. இதன் விளைவாகவே 33.6 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்றாலும் 75இடங்களை சி.சு. கட்சி பெறவும் 37.6 விழுக்காட்டினைப் பெற்றாலும் ஐ.தே.கட்சி 30 இடங்களை மட்டுமே பெறவும் முடிந்தது. இதேவேளை தேர்தல் கூட்டு காரணமாக 12 இடங்களை ல.ச.ச.கட்சி பெற்றாலும் அதன் வாக்கு விழுக்காடு 7.4 ஆக குறைந்ததை நாம் குறிப்பிட வேண்டும். முன்னரே பண்டாவிடம் பாடம் கற்காத வலது குறைந்த இவ்விடதுகளுக்கு சிறிமாவோ பாடம் படிப்பிக்கவே 1963-ஆம் ஆண்டளவில் இவ்விரு கட்சிகளும் தாங்க முடியாத நிலையில் அரசிலிருந்து வெளியேறின. இனியெப்போதும் கூட்டுச்சேரோம் எனக் கூறிய பின்னரும் ல.ச.ச.கட்சி மீண்டும் சிறிமாவோடு சேர்ந்தது. இத்தகைய இழிநிலையை தாங்காமலே எப்போதும் தமிழ் மக்களின் உண்மையான நண்பனாயிருந்த எட்மண்ட் சமரக்கொடியும் பாலாதம்புவும் ல.ச.ச.கட்சியிலிருந்து வெளியேறிய நிகழ்வு நடந்தது.

1970-ஆம் மேமாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய முன்னணி என்கிற பெயரில் உறுதியான கூட்டமைப்பாக தம்மை மக்கள் முன் காட்டி மூன்று கட்சிகளும் போட்டியிட்டன. 36.9 விழுக்காட்டு வாக்குகள் மூலம் 90 இடங்களையும் மற்றைய இரு கூட்டுக்கட்சிகளும் 12 விழுக்காட்டு வாக்குகளைப்பெற்று 25 இடங்களையும் பெற்றன. தனக்கு எதிரான வாக்குகள் சிதறடிக்கப்படாததால் 37.9 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்றாலும் ஐ.தே.கட்சி பெற்ற இடங்கள் 17 மட்டுமே. எனவே இடதுகளின் கூட்டுத்தந்த பெரும்பான்மைப் பலத்தோடு தரப்படுத்தல், புதிய யாப்பு, படுகொலைகள், தமிழ்த் துரோகிகள் உருவாக்கம் என சிறிமாவோ அட்டகாசம் புரிந்தார். இதனாலேயே 1975-ஆம் ஆண்டளவில் தந்தை தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க நேர்ந்தது. எனவே இத்தகைய அநீதிகட்கு துணையான இவ்விரு கட்சிகளும் மீண்டும் அம்மையாரால் அவமானப்படுத்தப்பட்டனர். இதனால் 1975-ஆம் ஆண்டளவில் ல.ச.ச.கட்சி வெளியேற்றப்படவும் க.கட்சி தாமாகவே வெளியேறவும் நேர்ந்தது. இவ்வாறு நேர்ந்ததனால் (காலம் கடந்து) பாடம் கற்ற இடதுகள் 1977-ஆம் ஆண்டுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு மிகப் பரிதாபகரமான தோல்வியை தழுவின. இவ்வாறாக வலப் பக்கம் சாய்ந்து வீழ்ந்துபோன கட்சிகளுக்கு இன்று அம்மையார் மகளான அடுத்த அம்மையார் சவப்பெட்டிக்கான இறுதியாணியை இறுக்குகின்றார். உண்மையில் அதிகம்படித்தும் மாக்சிய இயங்கியலை அறிந்தும் நாடாளுமன்ற அரசியலை கையாண்டு படுதோல்வி கண்ட இவர்கள் மூலோபாயம் என்ன?

சி.சு.கட்சிக்குள் மெல்ல ஊடுருவி, அக்கட்சியைக் கொண்டு தமது திட்டங்களை நிறைவேற்றி இறுதியாய் சி.சு.கட்சியை பலவீனப்படுத்தி உறுதிமிக்க மக்கள் கட்சியாக எழுவதே இவர்கள் இலக்கு என்பதை போனால் போகட்டுமென போகிற போக்கில் சொல்லிவைத்துப் போகின்றோம்.

இப்போது எம் வாசகர்களுக்கு நடந்ததும் நடக்கப்போவதும் தெளிவாகிவிடும். கூட்டுக்களமைத்து பதவிக்கு வருவதும், வந்தபின் தூக்கியெறிவதும், இதன்மூலம் இடது களை மக்கள் முன் செல்லாக் காசாக்கிய விதமும் இக்கட்சிகளைப் பிளந்து அழித்த பாங்கும் வழமையான கதை. ஐ.தே. கட்சியின் அடிப்படைக் கொள்கைகளோடு எவ்வகையிலும் வேறுபடாத சி.சு. கட்சி தன்னை வேறுபடுத்திக் காட்டவும் தன்னையொரு மத்திய - இடது நிலையெடுத்துள்ள (centre - left) முற்போக்கான கட்சியாகக் காட்டி சிங்கள மக்களை ஏய்க்கவும் முடிந்தது.

எனவே இப்பொழுது மகளின் முறை. 1994-ஆம் ஆண்டு பொதுசன முன்னணி யென்கிறபெயரில் பெரும் கூட்டமைத்து 17வருட ஐ.தே. கட்சியின்

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தின் தமிழ்க்கூடல் - II




# இசை நடன நாடக விழா

## ஒருபார்வை

மானுடத்தின் தமிழ்க் கூடல் இரண்டு, கலை பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடக விழா 2003 என்னும் விழிப்புத்தலைப்பில; தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் ஏப்ரல் 8,9, 10,11,12 ஆகிய திகதிகளில் நடந்து முடிந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இந்த விழா முன்னெடுக்கப்பெற்றது.

மிகவும் பௌத்திரமான நேர்த்தியுடன் காத்திரமாக எடுக்கப்பெறும் பெருவிழா போன்று இவ் இசை நடன நாடகவிழாவும் செய்நேர்த்திகளுடனும், நெறிமுறைகளுடனும் நடந்தேறியுள்ளது. இம்மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டின் விழா மானுடவிழுமிய பண்பாட்டின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும்.

மானுட மேன்மைகொள் நீதியின் கழுத்தினை மனிதக் கரங்களே முறித்துப்போடும் அநீதிகளை இன்றைய மானுட வரலாறு காண்கிறது. இருப்பினும் மானுடம் வெல்லும் எனும் நம்பிக்கையை ஊட்டும் ஒளிக் கதிர்கள் இன்னமும் முகம் காட்டிக்கொண்டுதான் உள்ளன.

மானுடத்தின் தமிழ்க் கூடல் அத்தகைய ஒரு முகமே!

மேற்படி ஐந்து நாட்களில், ஒவ்வொரு நாளும் பி.ப 4.00 மணிக்கு ஆரம்பித்து நள்ளிரவு 12.00மணி வரையும் (இறுதிநாள் விழா அடுத்த நாள் அதிகாலை 4.00மணிவரையும்) விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இவ்விழாவிலே கலந்துகொண்டு கலைக்கும் கலைக் கரங்கோர்ப்பிற்கும், நட்புறவிற்கும், வரலாற்றிற்கும் சேவை செய்துள்ளனர். அத்துடன் ஏராளமான பொதுமக்களும் இவ் விழா நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று, சுவைத்தும், நுகர்ந்தும் இன்புற்றுள்ளனர்.



இசை நடன நாடகவிழாவின் நிகழ்ச்சிகளை உள்வாங்கும் சுவைப்பு மனோபாவத்துடன் ஒவ்வொருநாளும் தங்களூர் ஆலயத் திருவிழாவிற்கு பக்தி நேர்த்தியுடன் கலந்து கொள்வதுபோல் இவ்விழாவிலும் மக்கள் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது. மண்டபம் நிறைந்துவழிய மக்கள் வெள்ளம் அலைபுரண்டது என்று சொல்ல முடியாவிட்டாலும் மண்டபத்துள் மக்கள் நிறைய இருக்கிறார்கள் என்று சொல்லும்வண்ணம் சுவைஞர்களின் வரவு ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இடம் பெற்றிருந்தது.

மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டு திருமலை மாவட்டத்தில் இக் காலப்பகுதியில் எடுக்கப்பெற்றது மிகவும் முக்கியமானது. மூவின மக்களும் திருமலை மாவட்டத்தில், அதுவும் அம்மக்கள் செறிந்துவாழும் நகரத்தினை அண்டிய உவர்மலையில் இவ்விழா நடைபெற்றுள்ளது. மூவின மக்களும் ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அசௌகரியத்திலிருந்து விடுபெற்று, ஒருவரையொருவர் நம்பிக்கைக் கண்கொண்டு நோக்கும் சௌகரிய நிலைமை தோற்றுவிக்கப் பெறவேண்டும். விட்டுககொடுப்பு, ஏற்றுக்கொள்ளல், வரவேற்றல், இடமளித்தல், மதிப்பளித்தல், கௌரவித்தல் என்னும் உயர் பண்பாட்டு அணைப்புகளாய்ச் செய்யப்படும் விழாக்கள், ஒன்றுகூடல்கள், கலந்துரையாடல்கள் இம்மக்களிடையே மிக மிக அவசியம். இந்த மேற்படி உயர்பண்பாட்டு அணைப்பாக மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டு கரங்களை நீட்டியுள்ளது.

இத்தகைய சிறப்பினைக் கொண்ட விழா திருமலை மாவட்டத்தில் எடுக்கப்பெறவேண்டிய ஒன்றுதான்.

மானுடத்தின் நோவுகளைக் கண்டு கொதிக்கும் மனோபாவம் மிக்கவர்களாயுள்ள, அழைக்கப்பெறமுடிந்த பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இந்த விழாவில் ஒருங்கிணைந்துள்ளனர். பரஸ்பரம் மனம் விட்டுப் பேசியுமுள்ளனர். ஒருவர் நோவை மற்றவர் அறிந்து கொண்டதோடு மட்டும் நின்றுவிடாது அந்த மனநோவுகளை ஆறச்செய்யும் ஒத்தட மருந்தாகவும் பழக்கப் பரிச்சயமும் கருத்துப்பகிர்வுகளும் செய்துள்ளனர்.

கலைஞர்களிடையே உண்டாகும் உறவுப்பாலத்திற்கு மொழி வேறுபாடு ஒரு தடையல்ல. எந்தக் கலைநிகழ்ச்சி எந்த மொழியில் நடைபெற்றதோ அந்தக் கலை நிகழ்ச்சியை, அம்மொழியைப் புரிந்து கொள்ள முடியாதவர்களே சுவைத்து மகிழ்ந்தது மட்டுமல்ல, கலைநிகழ்ச்சிகளின் முடிவில் அதன் கலைஞர்களைப் பாராட்டவும் உறவு கொண்டாடவும் செய்தார்கள்.

இந்தப் பாராட்டுதல்களின் போதும் மொழி ஒரு தடையாக இருக்கவில்லை. ஒருவரை ஒருவர் உயர்வோடு பார்க்கும் மேன்மைக் குணாம்சம் பொருந்திவந்தால் புரிவின்வழி தோன்றாதென யார் கூற முடியும்? வேறுபட்டு நின்ற இரு இனத்தின் கலைஞர்களும் சங்கமிக்க கலைப் படைப்பின், கலை நுகர்ச்சியின் நவிற்சிகளைப் பகிர்ந்து கொள்ள இந்த இசை நடன நாடக விழா களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இவ்விழாவின் ஏற்பாட்டு நேர்த்திகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த ஏற்பாட்டுச் செயற்பாடுகளுக்கு என தேர்ந்தெடுக்கப்பெற்ற இடங்களையும் சொல்லாமல் இருக்கமுடியாது.

தனக்கும், தன் முன்னேயுள்ள வில்லூன்றிக் கடலுக்கும் இடையில் ஊடறுத்துச்செல்லும் உட்துறைமுக வீதியைக் குறுக்கே தாண்டி, அந்தக் கடலின் மேற்பரப்பால் நோக்கி, கடலுக்குள் மலையொன்றைப் பெயர்த்துக் கட்டப்பெற்ற பிறிமா மா ஆலையின் பின்புறத்தைப் பார்த்தபடி ஒரு மாபெரும் கட்டடம் மிகவும் பிரமாண்டமாக எழுந்து நிற்கிறது. திருகோணமலை இந்து கலாச்சார மண்டபம் தான் அது. அகன்று நீண்டு உயர்ந்து ஒரு பெரிய விளையாட்டு மைதானம்போல தோன்றும் உள் மண்டபத்திலேயே, வருகைதந்த கலைஞர்களும் ஆர்வலர்களும் வரவேற்கப் பெற்றனர். குசலம் விசாரிக்கப் பெற்றனர்.

இந்நடவடிக்கைகளிற்கென நியமிக்கப்பெற்ற பொறுப்புவாய்ந்த ஒவ்வொருவரும் தத்தமக்குத் தரப்பெற்ற பணிகளைச் சரிவர ஆற்றிக் கொண்டிருந்தனர்.

பூரித்த மனப்பாங்கோடு வந்தவர்களும், உள்ளம் குதூகலித்து வரவேற்றவர்களும் ஒன்றிணைய இம்மண்டபம் கிடைத்தது பெரும் பாக்கியமே. தமிழ்பேசும் மக்க

**சு. அரசண்ணா**

ளின் உரிமைப் போராட்டமாக, அப் போராட்டத்தின் வெற்றியின் சான்றாக அக்கலாச்சார மண்டபம் விளங்கியது.

அந்த மண்டபத்திலிருந்து முன்பக்கப் பாதையால் நடந்து உட்துறைமுக வீதிக்கு வந்து, வலப்புறம் திரும்பி ஒரு நூற்றி ஐம்பது மீற்றருக்குக் கொஞ்சங்கூட நடந்து சென்றால், இடப்புறம் ஒருசந்தி, சந்திமுகப்பில் மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டின் அலங்கார வளைவு நிமிர்ந்து பார்த்து வியக்கவைக்கும். வளைவுக்கு உள்ளே செல்லும்போதே சிறிலங்கா பொலிஸ் காவலரண் ஒன்று கண்கள் வழியே மனதை உறுத்தி உராஞ்சும்.

அதைத் தவிர்த்துவிட்டு சற்றுத் தலையை நிமிர்த்தி பார்வையை முன்னே செலுத்தினால், விழாவின் நேர்த்தியான வீதியலங்காரம், அழைத்துச் சென்று, நுழைவாயிலைக் காணவைக்கும். விவேகானந்தாக் கல்லூரியின் நுழைவாயிலும் அதுதான். உள்நுழைந்தால்.....

வரவேற்போர், கண்காணிப்போர், வீடியோ படமெடுப்போர் எனப் பலர் கம்பீரமான தோற்றங்களுடன் நடந்தும் நின்றும், சுழன்று கொண்டிருந்தனர். சற்று உட்சென்று இடது பக்கம் திரும்பி நாலடிவைத்து, வலப் பக்கம் திரும்பி, ஐம்பது கவடுகள் சாய்வான ஏற்றத்தில் ஏறி இரகசிய மூச்சு இளைப்போடு அந்தச் சமதரைப்பகுதியில் காலடிவைத்து வந்த பாதையைத் திரும்பிப்பார்த்தால் மிகவும் உயரத்திற்கு வந்துவிட்டோம் என்ற உணர்வு பிறக்கும்.




அந்த உணர்வின் மனப் பூரிப்போடு விவேகானந்தாக் கல்லூரியின் (விழா நடக்கவிருக்கும்) மண்டபத்தின் புறத்தோற்றத்தையும், அதன் மீதான அலங்கரிப்பையும் கண்டு பிரமிக்காமல் இலயிக்காமல் இருக்க முடியாது. மலையைப் பெயர்த்துவிட்டுக் கட்டப் பெற்றதாம் அந்த மண்டபம். விவேகானந்தாக் கல்லூரியின் உள்ளேயுள்ள, இம் மண்டபத்துடன் ஏனைய மூன்றுமாடிக் கட்டடங்கள் மாடியல்லாத கட்டடங்கள், பூச்செடிகள், அழகுச்செடிகள், அவை நெய்யப்பட்ட நேர்த்திகள், ஒவ்வொரு இடத்தையும் வைத்திருந்த வண்ணங்கள் எல்லாமே அழகு நேர்த்தியுடன் இருந்தன. இவற்றுக்காகவும், இவ் விழாவிற்கு வேண்டிய இடங்களில் வேண்டியவாறும் சாரணர்களை நிறுத்தியும் விழாவின் நிறைவேற்றத்திற்கு உழைத்த கண்ணியத்திற்காகவும் அக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டமுனையும் ஆர்வம் பிறப்பதை எவரும் உணரமுடியும்.

08.04.2003 பிற்பகல் 4.00 மணிக்கு தமிழீழ தேசியக் கொடியேற்றலுடனும் அகவணக்கத்துடனும் மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டு ஆரம்பமானது.

சுடரும் தமிழால் ஓர் அரங்கு என்னும் பெயருடன் மண்டபத்தில் வருகை தந்தவர்களை வரவேற்று, மனஉவப்பை மனக் குதூகலத்தை எல்லோருக்கும் ஏற்படுத்தும் வகையில் அமைந்த வரவேற்புக் கலைப் படைப்பின் கம்பீர உத்தி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்திருக்கும். விழாவின் நல்லதோர் ஆரம்பமாக அது அமைந்தது. தொடர்ந்து வரவேற்புரை அதனையடுத்து நாதஸ்வர, தவில் கச்சேரி தமிழ்மணம் வீச இடம்பெற்றது. பின்னர் காவடி நடனம், தலைமையுரை, கருத்துரை, சிறப்புரை என்பன நடைபெற்று பின்னர் பாட்டு, நாடகம் என முதல்நாள் விழா நிகழ்வுகள் நடந்தேறின. சுவையூட்டின.

முதல்நாள் ஏற்றப்பெற்ற தமிழீழத் தேசியக்கொடி விழா முடியும் இறுதிநாள் வரை காற்றில் பறந்து கொண்டிருந்தது. இரவில் ஒளி பாய்ச்சப்பெற்றிருந்தது.

மிகச்சிறந்த மலர்களாக எடுத்து நாரில் பக்குவமாய் கோர்த்துச் செய்யப்பெற்ற அழகிய பூமாலை போன்று இசை நடன நாடகவிழா நல்ல நல்ல நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. பாட்டு, நாட்டாரிசை, நாட்டியாஞ்சலி, நடனம், வாத்தியப்பிருந்தா, நாட்டிய (நாடகம்)ம், காவடி நடனம், நாதஸ்வர இசை, வயலின் இசை, நாடகம், எழுச்சிகானம் ஆகிய கலைத் தேன்துளிகளை திறமையும், பாண்டித்தியமும் மிக்கவர்கள் ஐந்து நாட்களும் மாறி மாறி, அள்ளி அள்ளி எடுத்து ஊட்டினார்கள். உண்மையில் மேற்படியான பல்வேறு, வெவ்வேறு நிகழ்ச்சிகளை காணக்கிடைத்த பாக்கியம் கலந்துகொண்டவர்களால் நிச்சயம் உணரப்பெற்றிருக்கும்.

முதல்நாள் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக, பேராசிரியர் சரத் சந்திரவின் புகழ்பெற்ற 'மனமே' என்னும் சிங்கள மரபுவழி நாடகம் அரங்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனையிறவும் வலுச்சமநிலையும் பேச்சுவார்த்தையும்



ஆனையிறவுத் தாக்குதலின் மூன்றாம் ஆண்டு நினைவாக வெற்றிவிழா ஒன்று அலைபுரண்ட மக்கள் திரளோடும் புலிகளின் மூத்த தளபதிகள் போராளிகளோடும் நிகழ்ந்தேறியிருக்கிறது.

ஆனையிறவு என்றசொல் இலங்கைத்தீவில் அரசியல், இராணுவ பரிமாணம்கொண்ட சொல்லாகவே இருந்து வந்திருக்கின்றது. அது யுத்தத்திலும் அரசியலிலும் தாக்கம் செலுத்தவல்லதாக இருந்து வருகிறது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானம் ஆனையிறவுப் பெருந்தளத்தின் வீழ்ச்சியினுடைய எதிரொலி என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இத்தகையதொரு சமாதானம் இதற்குமுன் ஏன் நிகழவில்லை என்றால் ஒரு வகையில் ஆனையிறவுப் பெருந்த்தனம் கொண்டதாக எண்ணப்பட்ட யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு வலயமும் அதனால் சிங்கள தேசத்திற்கு எழுந்த தமிழர் மீதான வெற்றியில் கொண்ட இறுமாப்புமே என்பதையும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இன்று காட்டாற்று வெள்ளம்போல யாழ்.குடாவிலிருந்து திரண்டுவந்த மக்கள் வெள்ளம் ஆனையிறவின் வெற்றியை தமது வாழ்வின் மீதான வெற்றியாக உணர்த்தி நின்ற செய்தியையும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஏனெனில் சமாதானத்தின்பின் இத்தகைய சன வெள்ளம் முன்பு புலிகள் குடாநாட்டுக்குள் புகுந்தபோது அவர்களை அழைத்துப்போக முகமாலை நோக்கித் திரண்டது. பின்பு மாவீரர் துயிலுமில்லத்தில் நிறைந்து வழிந்தது. இறுதியாக இப்போது ஆனையிறவில்.

இந்த வெளிப்பாடுகளில் இருந்து சிங்கள தேசமும் சரி சர்வதேச சமூகமும் சரி புரிந்துகொள்ளவேண்டிய செய்திகள் நிறைய உண்டு.

மக்களின் இயல்பு வாழ்வை தோற்றுவிக்காத அல்லது தோற்றுவிக்க விரும்பாத சமாதானத்தில் புலிகள் முன்னேறுவது எதற்காக என்ற கேள்விக்கு புலிகள் மக்களுக்குப் பதில்சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

உடன்பட்டதை ஒரு வருடமாகியும் நடைமுறைப் படுத்தப்படாதபோது மேலும் புதிய உடன்பாடு காணவோ அதை நம்பியோ புலிகள் முன்னேறுவது சரியா என்ற கேள்விக்கும் புலிகள் பதில்சொல்ல வேண்டியவர்களாக இருப்பர்.

அதற்கு எத்தனை தூரம் புலிகளுக்குப் பொறுப்பிருக்கிறது என்பதை சமாதானத்தின்பின் மூன்று சந்தர்ப்பங்களிலும் திரண்ட மக்களின் உணர்ச்சிப்பெருக்கை வைத்து மறுதரப்பும், அனுசரணைத் தரப்பும் புரிந்துகொள்ளவேண்டும்.

டோக்கியோ மாநாட்டை புலிகள் தற்காலிகமாக புறக்கணித்துள்ள சூழலில் இந்த ஆனையிறவு வெற்றிவிழாவை சமாதானத்தின் காரணிகளை மீள் நினைவுபடுத்த வல்லதான ஒரு நிகழ்வாகக் கொள்ளலாம்.

புலிகள் 'ஓயாத அலைகள்-03'ஐ நிகழ்த்தி ஒரு தொடர் சமரின்மூலம் சத்ஜெய, ஜயசிக்குறு, ரணகோஷ போன்ற நடவடிக்கைகளில் ஆக்கிரமிக்கப்பட்ட வன்னி நிலப்பரப்புக்களை மீட்டெடுத்தனர்.

இந்த நடவடிக்கை அது வரைகாலமும் இராணுவத்திற்கு சாதகமாயிருந்த யுத்த சமநிலையில் ஒரு பெரும் தாக்கத்தை நிகழ்த்தியது. ஆயினும் இச்சமரின்மூலம் யுத்தச் சமநிலை புலிகளுக்கு சாதகமாக மாறிவிட்டதாக சிங்கள இராணுவ அரசியல் பீடமோ சர்வதேச சமூகமோ கருதவில்லை. ஆகக்கூடிய பட்சம் அதை ஒரு பாரிய இராணுவ பின்னடைவாகவோ பாதுகாப்புப் போர்முறைத் தந்திரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத தவறாகவோதான் அவை கருதத் தலைப்பட்டன. அது ஒரு இராணுவத் தோல்வியாகவே அல்ல.

அதற்கான காரணம் ஆனையிறவுப் பெருந்தளத்தின் வலிமையின் பின்னால் பாதுகாக்கப்பட்ட யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு வலயம் யுத்தச் சமநிலையில் ஒரு பெரும் திருப்பம் நிகழ்ந்துவிட்டதாக உணர்த்தவில்லை. எனவே ஆனையிறவுத் தளம் வீழாதவரை ஓயாத 'அலைகள்-03'ன் அரசியல் மாற்றங்களும் நிகழவில்லை.

இச்சூழலில்தான் புலிகள் பரந்தன், வெற்றிலைக்கேணி தளங்களைத் தாக்கியழித்து ஆனையிறவின் பக்கவாடுகளைச் சுற்றிவளைக்கும் தந்திரோபாயத்தில் இறங்கிய போது படைத்தரப்பும் அதனை மீளக் கைப்பற்றுவதற்கான ஆயத்தத்தில் இறங்கியது.

இது ஆனையிறவுத்தளம் யுத்தச் சமநிலையை தீர்மானிக்க வல்லதான, பறைசாற்ற வல்லதான சூழ்நிலையை உருவாக்கியது.

ஆனால் ஒரு நெடுஞ்சமரின்பின் புலிகளே ஆனையிறவுத் தளத்தை வெற்றிகொண்டனர். மட்டுமல்லாது யாழ்ப்பாணத்தின் மற்றைய நுழைவாயிலான தாளையடியையும் சங்குப்பிட்டியையும் வசப்படுத்தியிருந்தனர்.

புலிகள் தென்மராட்சிப் பகுதிக்குள் நுழைந்துவிட்டிருந்தபோது யுத்த சமநிலை முற்றாக புலிகளுக்கு சாதகமாக மாறிவிட்டிருந்தது. அப்போது உள்நாட்டு சர்வதேச நிலைமைகளில் புலிகள் பலமாகியிருந்தனர். ஆனால் சிங்கள அரசோ யுத்தத்தின் விளைவால் உள்நாட்டு சர்வதேச நிலைமைகளில் மிக மோசமாக பலவீனமாகி இருந்தது மட்டுமல்ல யுத்தத்தை எதிர்கொள்ள முடியாமலும் இருந்தது.

சர்வதேச கவனம் தமிழர் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டிருந்த அந்த வேளையில் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்து சமாதானத்தின் கரம்நீட்டி சர்வதேசத்திற்கு தம்மை வெளிப்படுத்தினர்.

ஆனால், ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தில் மறுதரப்பு அதற்கு உடன்படாதபோது புலிகள் வன்னித்தளத்தின் நாலா புறத்திலும் தமது பலத்தை பாதுகாப்பிற்காகப் பரப்பி வைத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் படைத்தரப்பு தனது மிச்சசொச்ச பலத்தை ஒருமுகப்படுத்த வாய்ப்பாக இருந்த இச்சூழலை பயன்படுத்தி தென்மராட்சிப் பகுதியை மீளக் கைப்பற்றியது.

இதனால் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஒரு பலவீனமாகவும் அவர்கள் கருதத் தலைப்பட்டனர். அதன் விளைவாக ஆனையிறவை கைப்பற்றும் நோக்கோடு 'தீச்சுவாலை' நடவடிக்கையை மிகப் பெருமளவிலான ஆயத்தத்தோடு செய்யமுனைந்து அதுகண்ட பாரதூரமான தோல்வி யுத்தத்தின் முழு நிலைமையிலும் தோல்வி ஏற்படக்கூடிய சூழலை இராணுவத்திற்கு உணர்த்தியது.

இது புலிகளிடம் யாழ்ப்பாணம் விழுவதை அதிகம் உறுதிசெய்து கொண்டதெனலாம்.

எனவே யுத்தத்தின் அப்போதைய நிலைமையில் இருப்ப தைத் தக்கவைக்க வழியற்ற நிலையில் அரசிற்கு யுத்த நிலைமையை அந்தளவிலேனும் பேணுவதற்கு சமாதானம் இன்றியமையாததாய் ஆயிற்று.

ஆக சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை யுத்தச் சமநிலையில் ஏற்பட்ட மாற்றத்திலிருந்தும் யுத்த ரீதியிலான தேவையிலிருந்துமே சமாதானம் முகிழ்த்தது என்று ஒரு தர்க்கம் இருக்கவே செய்கின்றது.

இன்றோ அவர்கள் தமது யுத்த நிலைமையை கவனமாக சீர்செய்து வருகின்றனர். பாதுகாப்பு செலவீனம் அதேயளவிலேயே உள்ளமை இதற்கு ஒரு குறிகாட்டி. இன்னும் சொன்னால் கால்நூற்றாண்டுகால யுத்தத்தில் தேவைப்படாத சக்திவாய்ந்த பாரிய யுத்தக் கப்பல்கள் இந்த சமாதானத்தின்போது யுத்தத்திற்குத் தாம் திரும்பப்போவதில்லை எனக்கூறும் ரணிலின் அரசாங்கத்திற்கு வல்லரசுகளிடமிருந்து கொள்வனவு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

பயிற்சி ஒப்பந்தங்கள், ஒத்திகைகள், ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தங்கள் என்றும் சமாதான காலத்தில் நடக்கத்தான் செய்கின்றன.

ஆனால் புலிகள் யுத்த சமநிலையைப் பேணுவதற்கு ஒரு அமைப்பென்ற ரீதியில் பல இடையூறுகள் இருக்கின்றன. அல்லது உருவாக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்தின்போது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கடற்பரப்பை ஏற்றுக்கொள்ளுவதில்கூட இன்றும் இழுபறிகள் நடக்கின்றன.

சமாதானத்தின்போது உடன்பட்ட 'மக்களுக்கு இயல்பு வாழ்வை அளிப்பது' தொடர்பாக நடைமுறைப்படுத்துவதை சீர்செய்யாத அரசு யுத்தத்தின்போது சீர்குலைந்துபோன யுத்த சமநிலையை சீர்செய்ய விளைகிறது.

உடன்பட்டதை நடைமுறைப்படுத்தாது பேச்சில் முன்னேற அழைப்பது பேச்சு மேசையில் மறுதரப்பை பலவீனப்படுத்துவதாகவே பொருள்கொள்ள இயலும்.

இது யுத்த சமநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் உள்நாட்டு சர்வதேச நிலைமைகளில் உருவாகிய பின்னடைவை தாம் சீர்செய்து வருவதான நம்பிக்கையால் எழுந்ததாக இருக்கலாம்.

ஆயின் இதற்கு தமிழ்மக்களிடமிருந்து காட்டமான எதிர்வினை அவசியமானதே. அதனையே புலிகள் செய்திருக்கின்றனர். இது சமாதானத்தைப் புலிகள் புறந்தள்ளுவதாகப் பொருளாகாது.

-பிரபுத்திரன்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளின் பின்னால்...

'உருவங்கள் மட்டும் உள்ளார்ந்த சக்திகளை வெளிப்படுத்தப் போதுமானவை அல்ல' என்பதற்கு எங்களிடம் உதாரணமாக அமைந்தவன் நீலன். ஐந்தரையடி உயரமும், ஒட்டிய வயிறும், 'அஸ்மா' நோயின் பாதிப்பை வெளிப்படுத்தும் நெஞ்சறையுமென பார்ப்பவர்களுக்கு கதாநாயக அந்தஸ்த்தை கொடுக்காத தோற்றம் கொண்டவன். எனினும் இவனது துறுதுறுப்பான விழிகள் இவனின் தேடலிற்கான இயல்பினை வெளிப்படுத்தப் போதுமானவையாகும். வெற்றியின் அத்திவாரங்களினுள் மறைந்தவர்கள் பலர் வெளித்தெரிவதில்லை. அவர்களுள் ஒருவனாக நீலனும் இருக்கின்றான். அவனது வாழ்வின் சில சம்பவங்களை மட்டும் கூறுவதினூடாக இவனை வெளிக்காட்ட முயற்சிக்கின்றோம்.

அப்பொழுது இவன் சிறு பராயத்தினன். சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் அச்சுறுத்தலுக்குள்ளான கிழக்கு மாகாணக் கிராமம் ஒன்றில் பிறந்தவன். பேரினவாதக் கோரங்கள் இவன் அயலினையும் தாக்கின. பல கிராமங்கள் காணாமல் போயின. ஆங்கில மருத்துவம் ஆரம்பப் படிகளையே கண்டிராத பிரதேசம் அவனது. ஒருநாள் இவனின் வலக்கை மோதிரவிரலை அரவம் தீண்டிவிட்டது. அவசர அவசரமாக சில ஊர்கள் கடந்து ஊர்ப்பரியாரி ஒருவரின் வீட்டை வந்தடைகிறார்கள். தமிழர்கள் தமிழர்களிடையிலேயே தம்மை அடையாளம் காட்டப் பயந்த சூழல். ஒருவாறு இவர்கள் நிலமையை விளங்கவைத்தனர். உடனடியாக ஊர்மருத்துவம் தொடங்கியது. பாம்புக் கடிக்குள்ளான அவனது விரல் சவர அலகினால் கீறிக் கிழிக்கப்பட்டு, இரத்தம் வெளியேற்றப்பட்டு, மரபுவழி மருத்துவம் கொடுக்கப்பட்டது. விவாதங்களிற்கு அப்பால் இவன் உயிர் தப்பினான் என்பது உண்மையானது.

தொடர்ந்த காலங்கள் இவனை ஒரு போராளியாக மாற்றியது. களங்கள் பலவற்றில் கால் பதித்தவனின் களச்செயற்பாடுகள் பதிவற்றும் போனவற்றுள் அடக்கம். பின்னர் நிதித்துறையில் கணக்காய்வாளனாக கடமையேற்றான். அதனைத் தொடர்ந்து மருத்துவப்பிரிவுப் போராளியாக மாறினான். இடைக்காலத்தில் இவன் உள்வாங்கியிருந்த வியாபார உலக அறிவும், பின்னர் பெற்றுக்கொண்ட மருத்துவ அறிவும் கைகொடுக்க போர்மருத்துவத்தை வளர்க்க பல திட்டங்களை தீட்டிச் செயற்பட்டான். பனி, மழை, வெயிலென இவன் பார்ப்பதுமில்லை, 'அஸ்மா' இவனை விட்டதுமில்லை. இவனை சேகுவராவுடன் ஒப்பிடுவதா இல்லை மூத்த உறுப்பினர் கப்டன் பண்டிதருடன் ஒப்பிடுவதா என எங்களிடையே ஒரு விவாதமே நடக்கும்.

தமிழீழப் போர் வரலாறு அதீத நெருக்கடிகளைச் சந்திக்கிறது. வன்னியில் தமிழர் போர்வீரம் அடைகாக்கப்படுகிறது. எதிரி எமது தந்திரோபாயப் பின் வாங்கல்களை எங்களின் நிரந்தரத் தோல்வியாக்க முயற்சிக்கின்றான். அயல் அரசோ பழிவாங்கும் படலத்தை இறுக்கமாகவே கடைப்பிடிக்கின்றது. நாங்கள் மூச்சுவிடுவதற்காக மூச்சுப்பிடித்து அடித்த அடியில் முல்லைத்தீவு முகாம் வீழ்ந்துவிட்டது. முந்நூறு போராளிகள் வீரச்சாவடைய, ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைய எங்களின் மருத்துவ வளங்கள் வற்றிவிட்டன. எதிரி கிளிநொச்சி நோக்கி படைநகர்வை தொடங்கிவிட்டான். 'நீலன் நீ வந்தால் சண்டை வெல்லும், வராவிட்டால் சண்டை தோற்கும்' துறைப் பொறுப்பாளரின் கூற்று ரீங்காரமிட தமிழீழத்தின் தொப்பிழ் கொடியூடு பயணத்தைத் தொடர்கின்றான்.

முன்பின் அறிமுகமில்லாத அயல்தேசம், மொழி உச்சரிப்பு வித்தியாசமே ஏற்ற கடமைக்கு உலை வைத்துவிடும். கூட்டிச் சென்றவர்களும், இவன் கூட்டுச்சேர இருந்தவர்களும் கைதிகளாயினர், அல்லது காணாமல் போயினர். இவனது நிலையோ பரசூட்டில் சகாரா பாலைவனத்தில் குதித்தவன் போலாகி விட்டது. தாய்மொழி பேசுபவர்களிடையேகூட வாய்திறக்க முடியாமல் செயற்கை ஊமையாகினான். இங்கு காயமடைந்த சிலநூறு போராளிகளினதும், களத்தில் நிற்கும் சிலவாயிரம் போராளிகளினதும் நன்நிலையும், உயிரும் இவனது செயற்பாட்டில் தங்கியுள்ளது. இவனின் நிலையோ?

ஊர்க்கோவில் ஒன்றின் முன்றலில் தாடிவளர்த்து, கந்தல் உடை உடுத்து, பதினைந்து நாட்களினுள் பதினைந்து வயது அதிகரித்தவனாக, பிச்சைக்காரனாக, பசிவயிற்றைக் கிள்ள காத்திருக்கின்றான்.



லெப். கேணல் நீலன்

தோற்றம்–08.02.1972

வீரச்சாவு–08.02.1999

'படைத்தவன் படியளப்பான்' எங்கோ கேட்டது இவனுள் எதிரொலிக்கின்றது. இவனுடன் போட்டிக்கு இன்னும் சில ஏழைச்சிறுவர்கள். பக்தனொருவன் உடைத்த தேங்காய்ச் சிதறல்களில் ஒன்றை அவர்களுடன் மல்லுக்கட்டி எடுக்கின்றான். ஒட்டிய மண்ணை கையினால் தட்டிவிட்டு உண்கின்றான். தேசத்திற்காய் தேவனிடம் பிச்சை எடுக்கின்றான்.

ஈழத்தமிழ் கதைத்தால் உடன் கைதாவான். சரளமாகத் தாய்மொழியும், சாதாரணமாக ஆங்கிலமும் கதைக்கத் தெரிந்திருந்தும் ஊமையாகவே நடக்கின்றான், நடிக்கின்றான். மூட்டை சுமந்து சிறு கூலி பெறுகின்றான். சோற்றை மட்டும் கடையில் வாங்குகின்றான். 'ஏன் தம்பி கறி வேண்டாமோ?' கடைக்காரனின் கேள்விக்கு பதில் கூறாமலே சற்றுத் தள்ளிச்சென்று தண்ணீர் தெளித்து உண்கின்றான்.

பிச்சை எடுப்பது, கூலி வேலைகள் செய்வது, பிரதேசங்களை படிப்பதென நாட்களைக் கடத்தியவன் ஒருவாறாக கடற்கரையை வந்தடைகின்றான். எப்படியோ ஈழப்போராட்ட அநுதாபியொருவரின் வள்ளத்தை அடையாளம் காண்கின்றான். அவனுடன் தொடர்பு கொண்டு தன்னை இக்கரை சேர்க்கும்படி மன்றாடுகின்றான். நம்பிக்கையீனத்துடன் இரங்கியவன் இவனை இக்கரையில் இறக்கி விடுகின்றான். மருந்து சேர்க்கச் சென்ற போராளி பல நாட்கள் பட்டினி கிடந்து பரதேசியாக உருமாறி மீண்டும் சொந்தமண்ணில் கால் பதிக்கின்றான்.

தேசத்தின் தேவை மீண்டும் இவனை அக்கரை அனுப்புகின்றது. 'நீலன் உன்னை நம்பித்தான் இருக்கிறம். நீ சாமான் அனுப்பிறியோ, இல்லையோ சண்டை நடக்கும், மருந்துகள் வந்தால் பலர் தப்புவர். இல்லை இறப்பார்கள்'. பொறுப்பாளரின் வாசகத்தை இதயத்தில் வாங்கியவன் மீண்டும் பயணத்தை தொடர்கின்றான்.

மீண்டும் பிரதேசங்களைப் படிக்கின்றான். நண்பர்களையும், முகாம்களையும் உருவாக்குகின்றான். பலநூறு மைல்கள் பயணம் செய்து சிறுசிறு அளவுகளில் பொருட்களை கொள்வனவு செய்கின்றான். பாரிய அளவில் பொருட்களை கொள்வனவு செய்கின்றான். பாரிய அளவில் ஒரு இடத்தில் வேண்டினால் பகைவனின் உளவுப்பிரிவிடம் சிக்கவேண்டிவரும் என்பதால், கணினி வலையினுள் புகுந்து வெவ்வேறு தேசங்களிலிருந்தும் தேவையானவற்றைத் தருவிக்கின்றான். தனியொருவனாக சில உள்ளூர் நண்பர்களுடன் மறைப்புக் கதைகளைக் கூறி மருத்துவப் பொருட்களை உரிய கடற்கரைக் கிராமங்களுக்கு கொண்டுவருவது என்பது விபரிப்பிற்கு அப்பாற்பட்ட கடினங்களையும், திட்டமிடல்களையும் கொண்டது. எது எப்படியோ ஆங்காங்கே பல தொன் பொருட்கள் கரை சேர்க்கப்பட்டுவிட்டது.

பல லட்சம் பெறுமதியான பொருட்களைச் சேர்ப்பதற்கு பன்மடங்கு செலவு. இவற்றை நீர் புகாவண்ணம் பொலித்தீன் பைகளில் போட்டு வாயினால் காற்றை உறிஞ்சி வெளியேற்றி பொதிகளாக்க வேண்டும். சிலரே இதனைச் செய்வார்கள். சுவாசப்பாதை தொய்வுடையவர்களுக்கு இவ்வாறு செய்யும்போது நெஞ்சு விம்மி வெடிப்பது போன்றிருக்கும். நீலன் இதனை அலட்சியம் செய்தே செயற்பட்டான். மீண்டும் அப்பொருட்களை கடல், மணல்தாண்டி தொடையளவு கடல்நீர் தாண்டி தூக்கிவந்து சிறுசிறு வள்ளங்களில் ஏற்றவேண்டும். கடல் ஈரலிப்பும், உப்புக்காற்றும் இவனது 'அஸ்மா' நோயை உலுப்பிவிட அதற்குரிய 'பம்மை' எடுத்து அடித்துவிட்டு மீண்டும் மீண்டும், மூச்சிரைக்க மூச்சிரைக்க, தோள்புண் ணிவெடுத்து இரத்தம் கசியக்கசிய அவற்றை ஏற்றிவிடுவான். உரிய அளவு வந்தவுடன் வள்ளங்கள் புறப்பட்டுவிடும். மிகுதிப் பொருட்களை மறைவிடம் சேர்ப்பதென்பது...... ஏற்றியவை தமிழீழத்தை நோக்கி கொண்டுவரப்படும். சிலசமயங்களில் இடைவெளியில் கடற்படையினால் தாக்கப்பட்டு மருந்துப் பொருட்களும் மாவீரர் உடல்களும் கரையொதுங்கும். இதனைப் பத்திரிகைகளில் பார்த்து அறிந்து கொள்வார்கள். அப்பொழுதெல்லாம் அவன் நினைப்பான் இன்றில்லாவிட்டால் என்றோவொரு நாள் தனக்கும் இப்படி நடக்குமென்று.

மீண்டும் தாயகம் திரும்புகின்றான். இப்பொழுது பரதேசியாக அல்ல. பரந்துபட்ட அறிவுடனும் செயல்புரியும் திறனுடனும் பிரதம மருத்துவர்களுடனும் துறைப் பொறுப்பாளர்களுடனும் கலந்தாலோசனைகளை மேற்கொள்கின்றான். திரும்பவும் கலம் ஏறுகின்றான். தேவையானவற்றை தேவையான நேரத்தில் தேவையான அளவில் அனுப்பி வைக்கின்றான்.

அந்நாட்டு உளவு ஸ்தாபனங்களிற்கு தண்ணி காட்டிவிட்டு பிறமொழி நகரங்கள் எல்லாம் சென்று வருகின்றான். செலவைப் பார்க்காமல் பொருட்கள் வேண்டிய காலம் போய் இப்பொழுது லாபமும் தரமும் பார்த்து தேவைக்குரியவற்றை கொள்வனவு செய்து அனுப்புகின்றான். தனியொருவனில் விடுதலைப்போரின் மருத்துவச் செயற்பாடு தங்கியிருப்பது என்பது பாரிய ஆபத்துக்களில் குறிப்பிடத்தக்கது என்பது வெளிப்படையானதே. தனக்குத் தெரிந்த தகவல்களையும், அனுபவங்களையும் இன்னும் சில போராளிகளுக்கு பகிர்ந்தளித்துப் பயிற்றுவிக்கின்றான். இப்பொழுது நீலன் தனக்குப் பதிலாகச் செயற்படக்கூடிய சிலரை உருவாக்கிவிட்டான். இவன்பற்றிய தகவல்களும் அந்நாட்டு உளவுத்துறைக்கு தேவையான அளவு கிடைத்துவிட்டது. அவர்களும் இவனை நெருங்கத் தொடங்கிவிட்டனர்.

'ஜெயசிக்குறு' தனது இறுதிமூச்சை விட்டுக்கொண்டிருக்கிறது. 'நீலன் தாயகம் வா' சந்கேத பாசையில் தகவல் அவனைச் சென்றடைகின்றது.

பலகோடி ரூபா பெறுமதியான பொருட்களுடனும் உயிர்களைக் கொடுத்துப் பெற்ற அரிய அனுபவங்களுடனும் தாய்ப்பசுவைக் கண்ணுற்ற கன்றென தாயகம் திரும்பிய நீலனை காலன் கடலில் வென்றுவிட்டான். அவன் சேர்த்துவந்த பொருட்களுடன், அவனினதும் அவனுடைய தோழர்களினதும் புகழுடல்கள் அக்கரையில் அலையில் மோதுவதாக பத்திரிகைகள் மீண்டும் செய்தி வெளியிட்டன. இங்கு இவன் மருத்துவப்பிரிவின் முதலாவது லெப்.கேணலாக படமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான். அடிப்படை மருத்துவ வசதிகளைக்கூட கண்டிராத கிராமத்தில் பிறந்தவன், உருவாகும் ஒரு தேசத்தின் மருத்துவக் கட்டுமாணத்தை தாங்கியவனாக மாறியதும், இறுதி மூச்சுக்கு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த மருத்துவப் பிரிவின் செயற்பாட்டிற்கு மூச்சுக்காற்றை வழங்கியதும் ஓர் அதிசயமான உண்மையாகவே எங்களால் நோக்கப்படுகின்றது.




—தூயவன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அவர்கள் சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும்"

த. மிகுதன்

வன்னியின் குக்கிராமம் ஒன்றின் மூலை. பத்து பன்னிரண்டு குடிசைகளின் முடிவாய் அந்த வளவு இருந்தது. ஒரு சில காட்டு மரங்களினால் எல்லையிடப்பட்டிருந்தது அது. ஒரு மூலையில் மண்டியிருந்த பற்றைகளை முதியவர் ஒருவர் வெட்டிக்கொண்டிருந்தார். நிலத்தில் குந்தியிருந்து பற்றைகளை கைகளால் தேடிப் பிடித்து சிறுகத்தியால் வெட்டிக் கொண்டிருக்கும் முதியவரை அண்மித்தால் அவர் இரண்டு கண்களின் பார்வையையும் இழந்தவர் என்பது தெரியும்.

அவரின் கண் பார்வையை பறித்தது கண்ணிவெடியல்ல துப்பாக்கிக் குண்டல்ல மாறாக அவரின் அறியாமையே அச் சமூகத்தின் இயலாமையே. சாதாரணமாக கண்களில் தோன்றும் நோய் ஒன்றே அவரின் கண்ணொளியை மறைத்திருந்தது. இப்போது அந்த முதியவர் எங்களோடு பேசுகிறார்.

"இரண்டுவருடங்களின் முன்பிருந்து எனது இரண்டு கண்களின் பார்வையையும் இழந்திருந்தேன். அதை திரும்பவும் பெறலாமென்று நான் கனவிலும் காணவில்லை. வயது போனால் கண்பார்வையில்லாமல் போயிடும் தானே என்று எல்லோரும் சொல்ல நான் ஆசுப்பத்திரிக்கும் போகயில்லை. ஆனால் கடவுள் அனுப்பினமாதிரி போராளிப் பிள்ளைகள் வீடு தேடி வந்திச்சுதுகள். அது ஒரு சின்ன வருத்தமெண்டு என்னைக் கூட்டிவந்து மருந்து செய்து இரண்டு கண்களையுமே சுகப்படுத்திப் போட்டுதுகள். இப்ப நான் என்ர பிள்ளையள் பேரப்பிள்ளையள் சொந்தம் பந்தங்களை எல்லாம் பாக்கிறன். போராளிகளோடையே நிண்டு வேலைசெய்யிறன். எனக்கு தேவையானதுகளை அதுகளே கவனிக்குதுகள்."

இப்படித்தான் வன்னியின் சில கிராமங்களும் மக்களும் வாழ்கிறார்கள். இத்தனை காலமும் போரின் பாரிய பழுக்களை அவர்கள் சுமந்தார்கள். நகர மக்களின் வாழ்க்கையை கட்டடங்களை போர் எப்படிச் சிதைத்து விட்டிருந்தது என்பது இதை வாசித்துக் கொண்டிருக்கும் எல்லோருக்கும் தெரியலாம். ஆனால் வன்னியின் இந்த கிராமங்களை போர் சிதைத்த கோலத்தை எல்லோராலும் கற்பனை செய்யமுடியாது. குடிசைகளுடனும் கூலித் தொழில்களுடனும் வாழ்ந்த அந்த மக்களை தொழிலற்றவர்களாகவும் குடிசை இழந்தவர்களாகவும் மாற்றியிருந்தார்கள் ஆக்கிரமிப்பாளர்கள்.



ஆனால் இந்த மக்களின் இருண்ட வாழ்விலும் ஒளிக்கீற்றொன்று தென்படத் தொடங்கியிருக்கிறது. அதை பேரொளியாக்கவும் அவர்கள் தயாராகிறார்கள். விடுதலை என்பது தனியே மண்ணுக்கும் மொழிக்கும் என்பதற்கும் அப்பால் ஒவ்வொரு மனிதனின் சமூக வாழ்விலும் உளவாழ்விலும் ஏற்பட வேண்டும் என்ற தமிழீழ தேசியத்தலைவரின் அவாவின் வழிபிறந்த "ஊரக வளர்ச்சிப் பணி'' இன்று அத்தகைய ஒவ்வொரு கிராமங்கள் தோறும் தன் பணியை ஆரம்பித்து விட்டது.

''கலியாண வீடோ பூசைவீடோ செத்தவீடோ என்ன எண்டாலும் நாங்கள் இஞ்சநிக்கிற தம்பியோட கதைக்காமல் செய்யிறது கிடையாது. எங்கட குடும்பத்தில ஒருத்தராய் இருந்து எங்ட முன்னேற்றத்துக்கு அந்த தம்பிதான் வழிகாட்டுறது. ஏன் முந்தி கண்டபடி குடிக்கிற என்ர மனுசனுக்குக்கூட இப்ப தம்பியைக் கண்டால் சரியான பயம்'' எனக் கூறும் தாய் ஒருவர் ''தம்பி, எனக் குறிப்பிடுவது ஊரக வளர்ச்சிப் பணிபுரியும் போராளி ஒருவரையே.

''இப்ப எங்கட கிராமத்தில எழுத வாசிக்க எண்டு தெரியாமல் இருக்கிறது குறைஞ்சு கொண்டு வருகுது. ஏனென்டா இப்ப எல்லாருமே ஒரு வகையில படிக்கினம். சின்னப்பிள்ளையளுக்கு முன்பள்ளி கட்டியிருக்கு. வளர்ந்தும் படிக்காமலிருந்த பிள்ளையளுக்கும் படிப்புக்கு ஒழுங்கு செய்திருக்குது. வயது போன வைக்கும் எல்லோ படிப்பிக்கினம் எங்கட பிள்ளையள். இப்ப எங்கட கிராமத்தில எழுத தெரியாமல் இருக்கிற தெண்டது மரியாதைக் குறைவாகப் போட்டுது." என ஆச்சரியம் ததும்ப குறிப்பிடுகிறார் கிராமப் பெண் ஒருவர்.

இவ்வாறு குறிப்பிடத்தக்க வகையிலே செயற்படும் ஊரகவளர்ச்சிப் பணி அமைப்பில் அங்கத்தவர்கள் அனைவரும் போராளிகளே. தமது பணிபற்றி அதன் பொறுப்பாளர் ம.அன்பரசன் அவர்கள் எம்முடன் கலந்துரையாடினார்.

''எங்கட மக்களில் எவருமே தனித்தும் கவனிக்கப்படாமலும் விடப்படக் கூடாது என்ற தலைவரினுடைய சிந்தனையைத்தான் நாங்கள் கொள்கையாக கொண்டிருக்கின்றோம்.

"நாங்கள் பணியாற்றுகிற கிராமங்களில் வாழும்



மக்கள் எவருக்கும் அந்த காணிகள் சொந்தமானவையல்ல. இப்போது அவர்களுக்கென சொந்தமான காணிகளை வழங்குமாறு தலைவர் கூறியுள்ளார். எமது மக்கள் எவருமே காணியற்றவர்களாகவோ வீடற்றவர்களாகவோ இருக்கக்கூடாது என்பது அவரது விருப்பம். எல்லோருக்கும் கல்வியறிவும் பொருளாதர மேம்பாட்டுக்கான அடிப்படைகளும் இருக்க வேண்டும் என்பது அவரது அவா. அந்த இலக்குடன்தான் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

"நாங்கள் கிராம மக்களுக்கு நேரடியான உதவிகளை செய்வது என்பது சாத்தியமற்றது. அதாவது உணவுகள் வழங்குவதோ அல்லது தற்காலிக நிவாரண உதவிகளை செய்வதென்பதோ ஒன்று எங்களால் இயலாது இரண்டாவது- அது அவர்களை முன்னேற விடாது. அத்துடன் அவர்களை யாரிலோ ஒருவரில் தங்கியிருக்கச் செய்துவிடும். அதனால் எங்கட நோக்கம் கிராம மக்களை 'தாங்களே தமது சொந்தக் காலில் நிற்கவேண்டும்' என்ற நிலைக்கு எடுத்துச் செல்வதுதான். அதுக்காக ஒவ்வொரு கிராம மக்களையும் சரியாக ஒன்றிணைத்து அவர்களுக்குள்ளேயே குழுக்களை உருவாக்கி அந்தக் குழுக்கள் மூலமாக கிராமத்தை விருத்தி செய்து வருகிறம். உதாரணத்திற்கு கல்வி என்றால் கல்விக்குழு. சுகாதாரம் என்றால் சுகாதாரக் குழு. விவசாயம் என்றால் விவசாயக்குழு என்பன அந்த மக்களைவைத்தே அமைக்கப்பட்டுள்ளன. இப்படி செய்ததால் எல்லாருமே சமுகப்பொறுப்பு உடையவர்களாக மாறுவினம்." என்கிறார் அன்பரசன்.

உண்மையிலே 'ஒருவனுக்கு மீனைக் கொடுப்பதிலும் மீன் பிடிக்கக் கற்றுக்கொடு, என்பார்கள். இங்கே தூண்டிலையும் கூடவே கொடுத்து மக்களை செம்மைப்படுத்தும் இவர்களின் பணி வரவேற்கத்தக்கதே. கிராமங்களில் முன்பள்ளிகளை அமைத்தல் பொது மண்டபங்களை அமைத்தல் ஏன் வீடுகளையும் பாடசாலைகளையும் கூடவே இவர்கள் உருவாக்கி கொடுக்கிறார்கள். இதற்கான உதவியும் பின்புலமும் எது எனக் கேட்ட போது,

"இதில் அதிகம் எங்கட (விடுதலைப் புலிகள்) அமைப்பினுடைய செலவிலேயே செய்யப்படுகின்றன. சிலவற்றை உதவிசெய்ய விரும்பும் நிறுவனங்கள், அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு அவற்றின் உதவியுடனும் செய்து வருகிறோம். ஏனென்றால் அதிகமான உதவி நிறுவனங்கள் உதவிக்கான வசதிகள் வைத்துள்ள போதும் சரியான முறையை தெரிவு செய்யாமலும் உதவியின் தன்மையை அடையாளம் காண முடியாமலும் தமது வளங்களை வீணடித்து வருகின்றன. ஆனால் எங்கள் பணி அமைப்பு செயற்படும் கிராமங்களில் அவர்கள் இலகுவாக செயற்பட முடிகின்றது. ஏனெனில் கிராம மக்களே தங்கள் தேவைகளை இனம் காட்டக் கூடியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அண்மையில் எங்கள் அமைப்பு மூலமாக எழுபத்தைந்து வீடுகளை சாந்தபுரத்தில் அமைத்து கொடுத்திருக்கிறோம். அதவிட அம்பாள் குளம், மலையாளபுரம், வேணாவில், இளங்கோபுரம், காந்திக்கிராமம், பாரதிபுரம் என்று பல கிராமங்களில் நாங்கள் எங்களுடைய பணியை செய்து வருகிறோம''.

> 'ஒருவனுக்கு மீனைக் கொடுப்பதிலும் மீன் பிடிக்கக் கற்றுக்கொடு' என்பார்கள். இங்கே தூண்டிலையும் கூடவே கொடுத்து மக்களை செம்மைப்படுத்தும் இவர்களின் பணி வரவேற்கத்தக்கதே.

இந்த ஊரக வளர்ச்சிப் பணி அமைப்பு போராளிகள் இருப்பதுகூட கிராம மக்களுடனேயே. இவர்களுக்கான உணவுப்பொருட்கள் மாதம் மாதம் அந்தந்தக் கிராம மக்களுக்கே அனுப்பப்பட அவற்றை வைத்தே போராளிகள் தங்கள் உணவுத் தேவையை நிவர்த்தி செய்கிறார்கள். அத்தோடு அவர்கள் நேரில் நின்று ஒவ்வொரு மக்களையும் வழி நடத்தி தங்கள் பணியை செம்மைப்படுத்துகின்றனர்.

''எங்கள் பாடசாலையிலிருந்து இதுவரை எவருமே மாவட்ட மாகாண மட்டங்களுக்கு விளையாடச் செல்லவில்லை. ஆனால் இம்முறை எங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதற்கு நாம் ஊரகவளர்ச்சிப் பணி போராளிக்கே நன்றி உடையவராக இருக்கிறோம'' என்று பூதன்வயல் கிராம பாடசாலை அதிபர் உரையாற்றியபோது குறிப்பிட்டதிலிருந்து, சகல துறைகளிலுமே ஒரு கிராமத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதில் அப்போராளிகள் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

கிராம மக்களுக்கான ஒரு சரியான தெளிவான திட்டத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவ் அமைப்பின் வெற்றிக்கு காரணம் மக்கள் போராளிகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையே என்கிறார் கிராம பெரியவர் ஒருவர். "நாங்கள் அவர்களை நம்புகிறோம். அவர்களின் எல்லா செயற்பாடுகளும் எங்களுக்காகவே. தமக்கென்று எதையுமே அவர்கள் வைத்திருக்க மாட்டார்கள்.'' என்று அவர் தொடர்கிறார்.

ஊரக வளர்ச்சிப்பணி அமைப்பின் மூலமாக எமது தேசியத் தலைவரின் அவாவை நிறைவுசெய்ய முடியும். மூன்றாண்டுகளிலேயே ஒரு கிராமத்தை அதன் மக்களில் தங்கிநிற்க செய்யமுடியும், ஒரு பூரண தெளிவான சமூகப் பற்றான சமுதாயத்தை கட்டியெழுப்பமுடியும் என்று நம்பிக்கை தருகிறார் அன்பரசன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊர் திரும்பும் சைபீரிய வாத்தே நில்லு!
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச்செல்லு"

—எழுச்சிப் பாடல் வரிகள்—

# இடப்பெயர்வும் ஈழத்தமிழர்களும்

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

இடப்பெயர்வுக்கும் ஈழத் தமிழருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கடந்த கால் நூற்றாண்டு எமது இடப்பெயர்வின் வரலாறாக அமைகின்றது. இருபதாம் நூற்றாண்டை இடம்பெயர்ந்தோர் நூற்றாண்டாக ஆய்வாளர்கள் வர்ணிப்பர். இடப்பெயர்வுக்குப் போரும் இன நெருக்கடிகளும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. தொடர்ச்சியான வறட்சி, பட்டினிச்சாவு போன்ற அனர்த்தங்களும் இடப்பெயர்வைத் தூண்டுகின்றன.

இடப்பெயர்வு இருவகைப்படும். சொந்த வாழ்விடத்தை விட்டகன்று தனது நாட்டின் பிறிதோர் பகுதியில் தஞ்சம் புகுவதை உள்நாட்டு இடப்பெயர்வு என்கிறார்கள். உள்நாட்டு இடம்பெயர்வோர் INTERNALLY DISPLACED PERSONS அல்லது ஐடீபீக்கள்; IDPs என்று அழைக்கப்படுகின்றனர். சொந்த நாட்டை விட்டகன்று பிற நாட்டில் புகலிடம் தேடுவோர் அகதிகள் REFUGEES எனப்படுவர். தமது உரிமைச் சொத்தில் வாழ முடியாத நிலை இருவகைக்கும் பொதுவான அம்சம்.

நவீன உலகின் தலையாய பிரச்சினைகளில் ஒன்றாக அகதிகள் மற்றும் போர்க்கைதிகள் விவகாரத்தை முதன்முறையாக அடையாளம் கண்டவர் நோர்வே நாட்டைச் சேர்ந்த பிறிற்யொப் நான்சன் FRIDTJOF NANSEN (1861–1930). முதலாம் உலகப்போர் 1918இல் முடிவுற்றபின் வடதுருவ ஆராய்ச்சியாளனும் விஞ்ஞானியுமாகிய நான்சன் சர்வதேச சங்கத்தின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார். தனது பதவி வரம்புகளுக்கு அப்பாற்பட்ட சேவையை வழங்கி அழியாப் புகழ்பெற்றார். அகதிகளுக்கான நான்சன் நிவாரண நிதியம் NANSEN RELIEF FUND, நாடு திரும்புவதற்கு உதவும் நான்சன் கடவுச்சீட்டு NANSEN PASSPORT என்பனவற்றை நிறுவினார்.

பிரான்சு நாட்டவரான லூசி ஷெவாலி அம்மையார் MADAME LUCY CHEVALLY நான்சனின் சமகாலத்தவர். அரை நூற்றாண்டு காலமாக இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்காக உழைத்தவர். இரண்டாம் உலகப் போரின்போது பிரான்சு ஜேர்மன் படைகள்வசம் வீழ்ந்தபோது ஷெவாலி அம்மையாரின் பணிகள் உச்சமடைந்தன. முதலாம் உலகப்போரின் இறுதிப் பகுதியில் அவர் மத்திய கிழக்கில் நிலைகொண்டிருந்தார். துருக்கியர்களுக்கு அஞ்சி ஓடிய ஆர்மீனிய மக்களுக்கு அரும்பணியாற்றினார். 1963 இல் அம்மையாரின் சேவைகளுக்கு பிரதியுபகாரமாக அவருக்கு நான்சன் பதக்கம் வழங்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் அனைத்துலக அகதிகள் அமைப்பு INTERNATIONAL REFUGEE ORGANIZATION என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது. 1951இல் இது மூடப்பட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் –UNITED NATIONS HIGH COMMISSIONER FOR REFUGEES அல்லது UNHCR என்ற அமைப்பு நிறுவப்பட்டது. அது அகதிகளுக்குச் சட்டப் பாதுகாப்பும், நிவாரண உதவிகளும், நாடு திரும்புவோருக்கு உதவிகளும் வழங்குகின்றது. சம்பந்தப்பட்ட அரசுகள் விடுக்கும் வேண்டுகோளின் பேரில்



அகதிகளுக்குப் பொருளுதவியும் செய்கின்றது.

ஒரு தற்காலிக அமைப்பாகவே யூஎன்எச்சீஆர் திறக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக அகதிகள் பிரச்சினைக்குத் திடீர் முடிவுகாண இயலவில்லை. 1994இல் மாத்திரம் உலகின் அகதிகள் மொத்த எண்ணிக்கை 25 மில்லியனுக்கும் கூடுதலாகக் காணப்பட்டது. 1993ஆம் ஆண்டு தொடக்கம் நாளொன்றுக்கு 10,000 என்ற அடிப்படையில் அகதிகள் எண்ணிக்கை கூடுதல் அடைந்தது. நாடுகள் இன்னும் ஸ்திரத்தன்மை அடையவில்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது. புதிய நாடுகள் பிறப்பெடுக்க முயலும்போது அகதிகள் மற்றும் உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை உயர்வடைகின்றது. இன்று ஐ.நா வின் நிரந்தர அலகுகளில் ஒன்றாக இவ்வமைப்பு இடம்பெறுகின்றது.

யூன் 20ஆம் நாள், 2001ஆம் ஆண்டு தொடக்கம் உலக அகதிகள் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. இதே நாளில் நடந்த கொழும்புநகர் மாநாட்டில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன. சிறிலங்காவின் மொத்த மக்கள் தொகையான 19 மில்லியனில் எட்டு வீதமானோர் அதாவது 1.5 மில்லியன் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டகன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அகதிகளாகி உள்ளனர். சிறிலங்காவின் உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 800,000, வெளிநாடுகளில் அகதியானோர் எண்ணிக்கை 700,000. இந்த மாநாட்டில் யூஎன்எச்சிஆர் அதிகாரிகள் வெளியிட்ட வேறு தகவல்கள் பின்வருமாறு:

கடந்த இரு தசாப்தங்களில் சிறிலங்காவின் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை பன்மடங்காகியுள்ளது. ஈழத்தமிழ் அகதிகள் இந்தியா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, வட அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் வாழ்கின்றனர். இவர்களிற் சிலர் அகதி என்ற நிலையைக் கடந்து குடிசார் உரிமைகளைப் பெற்று வாழ்வதாகவும் மேற்கூறிய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. கடந்த இரு தசாப்தங்களில் ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரிய ஈழத்தமிழர் எண்ணிக்கை 250,000 வரையிலோ அல்லது அதற்கும் கூடுதலாகவோ இருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இந்தியாவின் அகதி முகாம்களில் 60,000 வரையிலான ஈழத்தமிழர்கள் வாழ்கின்றனர்.

யூஎன்எச்சிஆர் வெளியிட்ட தகவல்களின்படி 1980–83 காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரும் ஈழத்தமிழர் எண்ணிக்கை 4,000 வரை இருந்தது. 1984–1999 காலப்பகுதியில் இவ்வெண்ணிக்கை 14,000 ஆக உயர்ந்தது. ஜேர்மனி, பிரான்சு, ஐக்கிய இராச்சியம், டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஈழத்தமிழர்கள் மிகக் கூடுதலாக வாழ்கின்றனர். தமிழீழத்திற்கு அடுத்ததாக மிகக் கூடுதலாக ஈழத்தமிழர்கள் வாழும் நாடாகக் கனடா இடம்பெறுகின்றது. 400,000 வரையிலான ஈழத்தமிழர்கள் இங்கு வாழ்வதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் முதலாவது அனைத்துலக அகதிநாள் சம்பந்தமான பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய ஐ.நாவுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரி பிறாட்மன் வீரக்கோன் "ஆசிய நாடுகள் யாவற்றிலும் பார்க்க மிகவும் கூடுதலான உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் வாழும் நாடு சிறிலங்காதான" என்று கூறினார். இதற்கான காரணம் யாதென்று அவர் கூறத் தவறிவிட்டார். டிசெம்பர் 10, 2000ஆம் நாள் மனித உரிமைகள், குடிமக்கள் உரிமைகள் பற்றிய கருத்தரங்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. முக்கிய விருந்துப் பேச்சாளராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதியரசர் இடம்பெயர்வின் அடிப்படைக் காரணத்தை விளக்கிப் பேசினார். அவருடைய உரையின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

சென்ற வாரம் தென்மராட்சியில் என்ன நடந்தது தெரியுமா?, என்று அவர் கேட்டதோடு பதிலும் கூறினார். அல்லாரைக் கிராமத்தை விட்டு வெளியேறும்படி இராணுவத்தினர் மக்களை நிர்ப்பந்தித்தனர். அவர்கள் மறுத்தபோது அவர்களுடைய வீடுகளுக்கு இராணுவத்தினர் தீவைத்தனர். ஒரு ஆங்கிலத் தட்டச்சு எழுத்தாளர் உதவியுடன் அந்த மக்கள் ஐசிஆர்சி, யூஎன்எச்சிஆர் போன்ற அமைப்புகளுக்கு மனுச் செய்தனர். இதை அறிந்த இராணுவத்தினர் பாதிக்கப்பட்ட மக்களைக் கைது செய்வதற்காக வலை விரித்தனர். எப்படியோ அந்த மக்கள் ஓடித்தப்பிவிட்டனர். ஆனால் பிடித்துக் கொடுக்கத் தவறிய குற்றத்திற்காக அல்லாரைக் கிராமசேவகர் படுமோசமாகத் தாக்கப்பட்டார். தட்டச்சாளர் குறிவைக்கப்பட்டார். தன்னைக் காப்பாற்றும்படி அவர் என்னிடம் வந்தார். நான் உதவும் நிலையில் இல்லை. அவர் குடும்பத்தினரோடு தலைமறைவாகிவிட்டார்.

யாழ்ப்பாணத்தின் அமைதிக்கும் நீதிக்குமான தொண்டர் அமைப்பு வெளியிட்ட தகவல்களின்படி வலிகாமத்தில் மாத்திரம் 81,000 வீடுகள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளன. அழிப்பின் தன்மையை உணர்த்துவதற்காக பின்வரும் உதாரணம் தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் இளவாலை, சிறுவிளான், பெருவிளான் கிராமங்களைச் சேர்ந்த பகுதியொன்றில் 42 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. பயன்தரு மரங்கள் வேரோடு களையப்பட்டன. புல்டோசர் உதவியுடன் கிணறுகள் யாவும் மூடி அழிக்கப்பட்டன. இராணுவத்தினருக்கு ஒரு விளையாட்டு நிலம் அமைப்பதற்காகவே இவ் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 2002இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் இரண்டாம் சரத்து இயல்பு நிலையை உருவாக்கும் நடைமுறைகள் பற்றிக் கூறுகின்றது. இவை எழுத்தில் மிகவும் உன்னதமாக இருப்பினும் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக இடம்பெயர்ந்தோருக்கு யாதொரு நற்பயனும் தரவில்லை. வணக்கத்தலங்கள், பாடசாலைக் கட்டடங்கள், பொதுக் கட்டடங்கள், வீடுகள் போன்றவற்றை விட்டு இராணுவம் விலகுவதற்கு ஒத்துக்கொண்டுள்ள போதும் அது இன்றுவரை நடைபெறவில்லை.

மீன்பிடிக்குத் தடங்கலான கட்டுப்பாடுகள் கட்டம் கட்டமாக விலக்கப்படும் என்றும் மேற்கூறிய உடன்படிக்கை உத்தரவாதம் வழங்கியது. ஆனால் கடற்படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கின்றன. யாழ் தீபகற்பத்தைச் சுற்றி முட்கம்பிவேலி அமைத்துள்ள கடற்படையினர் கடலுக்குச் செல்ல வழிவிடும் கதவுகளையும் அமைத்துள்ளனர். மீனவர்களுக்கான பாஸ் நடைமுறையை மீண்டும் புகுத்தியுள்ளனர். தமிழீழ மீனவர்கள் மீது பல்வேறு கெடுபிடிகளைப் பிரயோகிக்கும் கடற்படையினர் எமது கடற்பகுதியில் இந்திய, யப்பானிய, சீன மீன்பிடிக் கப்பல்கள் சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கு அனுமதித்துள்ளனர்.

பலாலி படைமுகாம் விஸ்தரிப்பின்போது வெளியேற்றப்பட்ட 70,000 வரையிலான மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை யாதொரு நட்டஈடும் வழங்கப்படவில்லை. பலாலியையும் அதன் சுற்றாடலையும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் பிரகடனப்படுத்தியுள்ளது. தோட்டச் செய்கைக்கு மிகவும் உகந்த 10,000 ஹெக்ரேயர் நிலம் இராணுவத்தின் பிடியில் அகப்பட்டுள்ளது. பலாலிச் சுற்றாடலில் முன்பிருந்த மக்கள் குடியிருப்புக்கள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இயல்புநிலைப் பிரகடனம் தமிழ்மக்களுக்கு நன்மை செய்யவில்லை என்பது வெளிப்படை.

யாழ் நகரின் இதயப்பகுதியில் இரு உல்லாசப் பயணிகள் விடுதிகளையும் அவற்றைச் சுற்றியுள்ள 80 பொதுமக்கள் வீடுகளையும் ஆக்கிரமித்துள்ள இராணுவம் இப்பிராந்தியத்தை விட்டகல மறுக்கின்றது. யாழ் நகரில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கம் சிங்கள இராணுவத்திடம் இருக்கிறது. பழைய மாநகரசபை வளாகம், சுப்பிரமணியம் பூங்கா, கோட்டை, முதலாம் குறுக்குத்தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த பிரதேசத்தில் பாரிய படைத்தளம், இராணுவ நிர்வாகச் செயலகம், உலங்குவானூர்தி இறங்குதளம் போன்றவற்றை அமைப்பதற்கு பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி இராணுவம் முயற்சிக்கின்றது. இது தற்காலிக ஒழுங்கு மாத்திரமே என்று இராணுவத்தினர் தரப்பில் கூறப்படுகின்றது. நிரந்தர ஒழுங்கு எப்படியிருக்குமென்று நினைத்துப்பார்க்க முடியவில்லை.

1025.20 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட யாழ் தீபகற்பத்தில் 30 வீதமான பங்கை இராணுவத்தினர் இன்றும் தமது பிடியில் வைத்திருக்கின்றனர். 150 இற்கும் மேற்பட்ட முகாம்களும் 40,000 வரையிலான துருப்புக்களும் இங்கு காணப்படுகின்றன. பெரும்பாலான முகாம்கள் பொது மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்குத் தாம் பாதுகாப்பு வழங்குவதாக இராணுவத்தினர் கூறினாலும் தமது சொந்தப் பாதுகாப்பிற்காகப் பொதுமக்கள் மத்தியில் நிலைகொண்டுள்ளனர் என்பதுதான் கசப்பான உண்மை. சில படைமுகாம் பகுதிகளை பொதுமக்கள் பாவனைக்கு விட்டுக் கொடுப்பதாக இராணுவம் பாசாங்கு செய்தபின் அதே பகுதியில் மிகவும் விரிவான படைமுகாமை அமைப்பது வழமை.

வட – கிழக்கின் உள்நாட்டு இடம்பெயர்ந்தோரைப் பொறுத்தளவில் இயல்புநிலை என்பது எட்டாத்தூரத்திலேயே இருக்கின்றது. 51 கிராமசேவையாளர் பிரிவுகள் யாழ் தீபகற்பத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இவ்வலயத்திற்குள் குடியேறும் உரிமை இடம்பெயர்ந்தோருக்கு மறுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்ட பகுதிக்கு வெளியேகூட பொதுமக்களின் வீடுகள், கடைகள் என்பவற்றை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. இவற்றைவிட்டு வெளியேறுவதற்கு பலவிதமான நொண்டிக் காரணங்களை இராணுவம் கூறிவருகின்றது.

பிரித்தானியாவின் அகதிகள் நலன்காக்கும் அமைப்பு (BRITISH REFUGEECOUNCIL) யூன் 2000இல் வெளியிட்ட அறிக்கைப்படி தென்மராட்சி மக்கள் தொகையில் 75 வீதமானவர்கள் இருக்க இடமின்றி அல்லல்படுகின்றனர். நோர்வே நாட்டின் அதேவகை அமைப்பு ஜனவரி 2001இல் வெளியிட்ட தகவலின்படி யாழ் நகரின் தென்மேற்குக் கரையோரத்தில் 300 வீடுகளை இராணுவத்தினர் இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். இந்த இலட்சணத்தில் இடம்பெயர்ந்தோருக்கு இயல்புநிலை எப்படித்தான் கிடைக்கும்?

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கிடைத்த சமாதானம் இராணுவத்தினருக்குச் சாதகமாக அமைந்துள்ளது. முன்பு எம்மைக் கண்டு அஞ்சி ஒடுங்கியவர்கள் எம்மைச் சீண்டிப்பார்க்கும் நிலைக்கு வந்துள்ளனர். இதில் கடற்படையினரும் விசேட அதிரடிப்படையினரும் முன்னணி இடம் வகிக்கின்றனர். அதியுயர் பாதுகாப்பு வலயம் சம்மந்தமாக சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு ஆலோசனை கூறவரும் வெளிநாட்டு நிபுணர்கள் முன்னாள் ஆயுதப் படையினராகவும், உளவுத்துறை மற்றும் ஆயுத வர்த்தகர்களின் முகவர்களாகவும் காணப்படுகின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய பகுதியினராகிய புலிகளுடன் பேச அவர்கள் மறுக்கின்றனர். பொதுமக்களையும், அவர்கள் பிரதிநிதிகளையும் இந்த நிபுணர்கள் உதாசீனம் செய்கின்றனர். இவர்களுடைய ஆலோசனையின் தன்மையை இதிலிருந்து உணரலாம்.

வட–கிழக்குவாழ் தமிழ் மக்களின் வாழ்வு வழமைக்குத் திரும்பவில்லை என்பதற்கு இப்பகுதிகளில் காணப்படும் அகதி முகாம்களும், நலன்புரி நிலையங்களும், அங்குவாழும் மக்களும் சான்று பகர்கின்றனர். படையினர் பிடித்து வைத்திருக்கும் வணக்கத்தலங்கள், கல்வி நிலையங்கள், பொதுக்கட்டடங்களும் அதையே சுட்டி நிற்கின்றன. தமிழ் மக்களுடைய விவசாயம், மீன்பிடி மற்றும் நல்வாழ்வு என எல்லாமே இப்போதும் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன.

**வட – கிழக்கில் சிவில் நிருவாகம் நடப்பதாக கூறப்பட்டாலும் இராணுவத்தினரின் பிரசன்னமும் சமயாசமயத் தலையீடுகளும் இராணுவ ஆட்சியையே பிரதிபலிக்கின்றன. கைப்பற்றப்பட்ட நாட்டு மக்கள்மீது தமது ஆட்சியை மிகவும் நுட்பமாக அவர்கள் செலுத்துகின்றனர்.**



வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் 72 நலன்புரி நிலையங்களில் 8,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் திருப்தி கரமாக அமையவில்லை. அரச அதிகாரிகளுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டும் பயன் கிடைக்கவில்லை. 2002–2003 காலப்பகுதியில் வன்னியில் வாழும் 25,245 சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து பாடசாலைகள் முற்றாக இயங்காதிருக்கின்றன. முல்லைத்தீவின் மாணவர் தொகை 18,926 என்றும் இவர்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர் எண்ணிக்கை 587 என்றும் அறியப்படுகின்றது. திருப்தி கரமான கல்வி புகட்டலுக்கு இன்னும் இதேயளவு ஆசிரியர்கள் தேவை ப்படுகின்றனர்.

ஜனவரி 2003இல் யுனிசெப் வெளியிட்ட அறிக்கைப்படி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் கல்வித் தராதரம் மோசமான நிலையில் உள்ளது. 200 வரையான பள்ளிக்கூடங்கள் மூடிக் கிடப்பதாகவும், ஆசிரியர் பற்றாக் குறையுடன் மாணவர் வரவின்மையும் காணப்படுவதாக அதே அறிக்கை தெரிவிக்கின்றது. வட–கிழக்கு மாணவர்களில் 25 வீதமானோர் உடல்–உளப்பாதிப்புக்களுக்கு உட்பட்ட நிலையில் கல்வியில் தீவிர கவனம் செலுத்த முடியாதிருக்கின்றனர்.

வட–கிழக்கில் சிவில் நிருவாகம் நடப்பதாகக் கூறப்பட்டாலும் இராணுவத்தினரின் பிரசன்னமும் சமயாசமயத் தலையீடுகளும் இராணுவ ஆட்சியைப் பிரதிபலிக்கின்றன. ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டின் மக்கள்மீது தமது ஆட்சியை மிகவும் நுட்பமாக அவர்கள் செலுத்துகின்றனர். இராணுவ ஆட்சியின் மேலுருவம் மாற்றப்பட்டாலும் அதன் அடிப்படை அப்படியே மாறாதிருக்கின்றது. இவ்வருடம் வவுனியா நெலுக்குளம் மகாவித்தியாலயத்தில் தியாகதீபம் அன்னைபூபதியின் நினைவு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட போது இது தொடர்பாக சிறிலங்காப் படையினரின் வன்னிப் பிராந்தியத் தலைமையகம் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், பாடசாலை அதிபருக்கும் விளக்கம்கோரும் கடிதங்களை அனுப்பியுள்ளமை வேறு எதனைப் புலப்படுத்துகின்றது?

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் (UN CHARTER) முதலாம் வாசகத்தின் கீழ் யாவருக்கும் இன, பால், மொழி மற்றும் மத வித்தியாசமின்றி மனித உரிமைகளும் அடிப்படை விடுதலையும் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து 1948 டிசெம்பர் 10ஆம் நாள் ஐ.நா பொதுச்சபை மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தை நிறைவேற்றியது. இது UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS அல்லது UDHR என்று அழைக்கப்படுகின்றது. இதன்கீழ் வரலாற்றில் முதல்முறையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் நிலைநாட்டவும் சர்வதேச சமூகம் பொறுப்பேற்றுக்கொண்டது. வட–கிழக்கில் நடக்கும் இராணுவ முன்னெடுப்புக்கள் மனித உரிமைச் சாசனத்திற்கு மாறானவையாக உள்ளன.

அகதிகள் பற்றிய விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஐ.நாவின் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் பற்றிய விடயங்களை நிர்வகிப்பதற்காக இதுவரையில் ஐ.நா ஒரு பிரிவையும் உருவாக்கவில்லை. 1992இல் டாக்டர் பிரான்சிஸ் டென்ங் (Dr.Francis Deng) உள்நாட்டு இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகளைக் கவுனிப்பதற்காக ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டார். டென்ங் தலைமையில் செயற்பட்ட சட்ட நிபுணர்கள் 1998இல் உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான சட்டக்கோவையை உருவாக்கினர். இது GUIDING PRINCIPLES ON INTERNAL DISPLACEMENT என்று அழைக்கப்படுகின்றது. இது மனித உரிமை ஆணையத்தால் அதே வருடம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறிய சட்டக் கோவையின் 28ஆம் சரத்து மீள்குடியமர்வு தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றது:–

மீள்வருகை, மீள்குடியமர்வு, மீள் ஒருங்கிணைவு PRINCIPLES RELATING TO RETURN, RESETTLEMENT AND REINTEGRATION

28.1 உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் தாமாகவே சுய விருப்புடன் பாதுகாப்பாகவும், தன் மானத்துடனும் தமது குடியிருப்புகளிலும், வழமையான இருப்பிடங்களிலும் குடியமர்வதற்கு அல்லது அதே நாட்டின் பிறிதொரு பகுதியில் சுய விருப்பில் குடியமர்வதற்கு வேண்டிய சூழலை உருவாக்கி உதவிகளை வழங்குவது அதிகாரத்திலுள்ளோரின் முதற்கடமையும் பொறுப்புமாகும். அப்படிக் குடியமர்வுக்குட்படும் உள்நாட்டு இடம்பெயர்ந்தோருக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுப்பதுவும் அப்படியான அதிகாரிகள் பொறுப்பாகும்.

28.2 உள்நாட்டு இடம்பெயர்ந்தோரின் மீள்வருகை, மீள் குடியமர்வு, மீள் ஒருங்கிணைவு ஆகியவற்றில் அவர்களுடைய (உள்நாட்டு இடம்பெயர்ந் தோர்) முழு அளவு ஈடுபாட்டை உறுதி செய்வதில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களத்து விதிகள்

முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள 'மேஜர் சிந்தனைச்செல்வன்' ஞாபகார்த்த போர் மருத்துவமனை வழமைக்கு மாறாக இன்று சோகத்தில் அமிழ்ந்துள்ளது. அங்கங்கள் அகற்றுதலையும், காயங்கள் சீராக்கலையும், பிரவாகிக்கும் வேதனை ஒலிகளையும், அடிக்கடி சந்திக்கும் உயிரிழப்புக்களையும் தன்னுள் நடைபெறும் சாதாரண நிகழ்வாகக் கணித்திருந்தது அம்மருத்துவமனை. இன்று தன்வேகம் சற்றடக்கி மௌனத்தில் அழுகின்றது. அதன் முன்றலில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் கப்டன் கார்முகிலனின் வித்துடல் வைக்கப்பட்டுள்ளது. ஆம் இம்மருத்துவமனையின் உயிர்த்துடிப்பான செயற்பாட்டிற்கு ஒருவருடத்திற்கு மேலாக அச்சாணியாக இருந்தவன் இப்பொழுது மூச்சடங்கிக் கிடக்கின்றான்.

இவ்வஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்பவர்களில் பெரும்பாலானோர் போரின் வடுக்களை வெளிப்படையாகச் சுமந்தவண்ணம் உள்ளனர். ஒலிக்கும் சோககீதம் மனதை உருக்குகின்றது. ஒவ்வொருவராக மலர் தூவுகின்றனர். போராளிகள் தங்கள் கனக்கும் இதயம் கண்ணீராக மாறாமல் இருக்க கடினப்படுகின்றார்கள். அப்பொழுது போராளியொருவன் ஊன்றுகோலின் உதவியுடன் POP கட்டுப்போட்ட தனது வலதுகாலை நிலத்தில் ஊன்றாமல் புகழுடல் நோக்கி மெல்லமெல்ல நகர்கின்றான். அசைவின்போது சிதைந்த என்புகள் வெளிப்படுத்தும் வலி சோகத்தை மீறி முகத்தில் வெளிப்படுகின்றது. இவற்றைக் கவனித்துக்கொண்டிருக்கும் வாணனின் கண்களினுள் கடந்தகாலம் விரிகின்றது.

தமிழீழத்தின் தொண்டையில் முள்ளாய் உறுத்திய ஆனையிறவு முகாம் முற்றுகையிடப்பட்டுவிட்டது. அம்முற்றுகையை இறுக்கி எதிரியை ஓடவிரட்டும் தொடர் சமர்கள் நடைபெறுகின்றன. வெற்றிலைக்கேணி, புல்லாவெளி, நாகர்கோவில் மற்றும் தரையிறக்கம் நடைபெற்ற குடாரப்புப் பகுதிக்கான பிரதான களமருத்துவமுகாம் கட்டைக்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. எதிரியின் எறிகணைவீச்சு வலயத்தினுள்ளேயே அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. அண்மையில் விழுந்து வெடிக்கும் எறிகணைச் சத்தங்களையும், போர் விமானங்களின் பேரிரைச்சலையும் சிலமைல் தொலைவில் சடசடக்கும் துப்பாக்கியின் ஓசைகளையும் அலட்சியம் செய்தவண்ணம் அம்முகாமில் நிற்பவர்கள் துரிதமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சத்திர சிகிச்சைக்கான மேசையில் ஒருவன் மயங்கிய நிலையில் கிடத்தப்பட்டுள்ளான். அவனது சிதைந்த வலது மேற்கை தசைநார்கள் பிரிக்கப்பட்டுள்ளது. அதனூடாகச் செல்லும் மேலவயவ பிரதான நாடியானது சிதைந்துள்ளது. அதனை வெட்டிப் பொருத்தும் நுணுக்கமான சத்திர சிகிச்சையானது மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு மயக்கமருந்து கொடுக்கும் பொறுப்பை கார்முகிலன் ஏற்றிருந்தான். களங்களுக்கு அண்மையில் இவ்வாறான சிகிச்சைகளைச் செய்வதென்பது அசாத்தியமானது. அவசர உயிர்காப்புச் சிகிச்சைகளைச் செய்வதும் வேகமான பாதுகாப்பான பின் நகர்த்தலுமே இவர்களுக்கென வரையறுக்கப்பட்ட பணி. எனினும் இங்கு இது விதிவிலக்கானது. கண்டாவளை நீரேரி கடந்துசெல்ல சிலமணிகள் பிடிக்கும். அவ்வாறு அனுப்பப்படின் இப்போராளியின் வலக்கை தோள்மூட்டுடன் துண்டிக்கப்படுதல் தவிர்க்க முடியாதது ஆகிவிடும். எனினும் மூன்று நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும். ஒரு சத்திர சிகிச்சையை இங்கு ஆரம்பிப்பது வரவேற்புக்குரியது அல்ல. இதில் அமிழ்ந்திருக்கும்போது தவறியேனும் விழும் ஒரு எறிகணையே பல பெறுமதியான உயிர்களைப் பலியெடுத்துவிடும். இதனைப் பொருட்படுத்தாத கார்முகிலன் மற்றவர்களுக்கும் உற்சாகம் கொடுக்கின்றான். எல்லோருமாக சிகிச்சையை ஆரம்பித்துவிட்டார்கள். அப்பொழுது சிலமீற்றர் தூரத்தில் அடுத்தடுத்து மூன்று ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. அவற்றின் சிதறல்கள் இவர்களைச் சுற்றிவர அடுக்கப்பட்டுள்ள பனைமரக் குற்றிகளைச் சிராய்க்கின்றன. சூழலில் காணப்பட்டவர்கள் நிலக்கீழ் அறைகளினுள் புகுந்துவிட்டார்கள். முகாம் பொறுப்பாளர் இவர்களைக் கீழே வரும்படி வற்புறுத்துகின்றார். அப்பொழுது இவன் சொல்கின்றான். "இப்படியே விட்டு வர ஏலாது. ஆளையும் தூக்கிக்கொண்டு உள்ளுக்குள்ள வர ஏலாது." கோபமடைந்த பொறுப்பாளர் சற்று உரக்கவே சொல்கின்றார். "நீங்கள் ஒரு உயிரைப் பாக்கின்றீர்கள், நாங்கள் பல உயிரைப் பாக்கின்றோம். உங்களை நம்பி முன்னால சண்டைபிடிக்கிற ஆக்களின் மனநிலையைப் பார்க்கின்றோம். இப்படி அடம்பிடிச்சுத்தான் 43 பேர் ஒண்டாச் செத்தது." அவரது கோபத்தின் நியாயம் புரிகின்றது. இவர்களின் நிலையைப் பொருட்படுத்தாது எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. சிறிது நேரத்தில் போர் ஓய்கின்றது. எல்லோரும் கூடியிருந்து கதைக்கின்றார்கள்.

அப்பொழுது ஒருவன் சற்று ஏளனம் கலந்த குரலில் கூறுகின்றான், "டொக்டர்! நீங்கள் பெரிய வீரனெண்டும் தியாகி எண்டும்



நினைக்கிறியள். உங்களை விட்டிட்டு நாங்கள் எப்படி பங்கருக்குள்ள போறது?" அவனுக்குக் கோபம் வருமென்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அதற்குப் பதிலாக நிதானமாக புன்முறுவல் பூத்தான். சிறிது இடைவெளிவிட்டு கதைக்கின்றான், "நான் இதை வீரம் எண்டோ, தியாகமெண்டோ பார்க்கவில்லை. கடமையென்று பார்க்கிறன்." "என்ன சொல்லுறியள்?" "எப்படி இந்த மண்ணில பிறந்தவன் போராட வேண்டியது கடமையோ, அதுமாதிரி போராளி மருத்துவரான நாங்கள் காயப்பட்டவர்களை முடிந்தளவு காப்பாற்றவேணும். அதுவும் கடமையே. கடமையைச் செய்யிறதால ஏற்படுகின்ற மனத்திருப்தியை இந்த செல்வீச்சுக்காக நாங்கள் இழக்க முடியாதுதானே!" இங்கு அர்ப்பணிப்புடன் போராடுவதையே இவன் கடமையென கருதுவது சிந்திக்க வைக்கின்றது.

இப்பொழுது கார்முகிலன் மணலாற்றுப் பகுதியில் களமருத்துவனாகப் பணியாற்றுகின்றான். அவனுக்கு அறிவித்தலொன்று வருகின்றது நெடுங்கேணிப் பகுதியில் வேவுக்குப்போன அணியொன்று தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டதாவும், ஒருவன் காயமடைந்து விட்டதாகவும், இவர்களை ஆயத்தமாக இருக்கும்படியும். உடனடியாக இவன் வரைபடத்தை எடுத்துப் பார்க்கின்றான். அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் இருந்து இங்கு வந்துசேர குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் எடுக்கும். அதுவரை காத்திருப்பது நியாயமற்ற செயல். வேவுப்புலியொருவனுடன் கதைக்கின்றான். பின் இருவரும் மருத்துவப் பையையும் தமக்குரிய ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு காட்டினை ஊடறுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"டொக்டர் நாங்கள் சூனியப் பிரதேசத்தினுள்ள போறம், அவன்ரை கொமாண்டோஸ் அடிக்கடி இஞ்சால வாறவங்கள். அடிவிழுறதும் வழமை. அப்படி அடிவிழுந்தா என்ன செய்யிறது?" வேவுப்புலி கேட்கின்றான். "வழமையா என்ன செய்யிறனீங்கள்?" "நிலமைக்கு ஏற்ப முடிவெடுப்போம். அவன் முந்தினால் கூண்டிக்கொடுக்க வேண்டியதுதான்." சற்றுச் சிரிப்புடன் சொல்கின்றான். "சரி அடிவிழுந்தால் அப்படியே செய்வம்." "அது சின்னப்பிரச்சினை." "அப்ப எது பெரிய பிரச்சினை?" "இந்தக்காடு எனக்கு அத்துப்படி. நான் தப்பிடுவன். நீங்கள் பாதை மாறினால் கஸ்ரப்படவேண்டிவரும்." என்று கூறினான். அப்படி நடைபெற்றால் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை கார்முகிலனுக்கு விளக்குகின்றான். தங்கள் ஊடுருவி அலசும் பார்வையால் காட்டை அவதானித்தபடி விரைகின்றனர். இவன் மருத்துவப் பையினுள் மேலதிகமாக வைத்திருக்கும் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் அதிக பாரத்தைக் கொடுக்கின்றது. அதனால் இவன் வேகம் சற்றுக் குறைகின்றது. 'சே... ஒரு பத்து நிமிடம் முந்திவந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம்' எனத் தன்னுள் பின்னர் கவலைப்படுவதைத் தவிர்ப்பதற்காக மூச்சுப்பிடித்து வேகமாக நடக்கிறான். இவனது மனவோட்டத்தைப் புரிந்த வேவுப்புலி, சற்று முன்னால் விரைந்து அடர் கொப்புகளை விலத்தி பாதை எடுத்துக் கொடுக்கின்றான். குனிந்து, வளைந்து, நிமிர்ந்து 'ஒருநாள் நடப்பதற்கே தான் இவ்வளவு கஸ்ரப்படுறன் வேவுக்காரன் ஒவ்வொரு நாளும் இப்படித்தானே நடப்பினம' என ஒப்பிட்டுத் தனது கடினத்தைச் சிறிதாக்கிக் கொள்கிறான்.

சுமார் இரு மணித்தியாலத்தின் பின்னர் வேவுக்காரன் சொல்கிறான், "டொக்டர்! இதுதான் கடைசி R.V, இதில நிப்பம். இன்னும் கொஞ்ச நேரத்தில அவையள் எப்படியும் இங்க வந்து சேருவினம்." இவர்கள் ஒரு பெரிய முதிரை மரத்தடியில் அமர்கின்றனர். சற்றுத் தொலைவில் சிலர் வருவதற்கான அரவம் கேட்கிறது. இவர்கள் எழுந்து மரக்கொப்புகளிடையே உற்றுக் கவனிக்கிறார்கள். ஒரு சறத்தினூடு இரு காட்டுத் தடிகளைப் புகுத்தி, அதில் காயமடைந்தவனைக் கிடத்தி காவிவருகின்றார்கள். சுற்றிவர ஏனையவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களை நோக்கி குரல்கொடுத்து, சைகை செய்கின்றார்கள். தங்களை அவர்கள் அடையாளம் கண்டதை உறுதிப்படுத்தியவுடன் அவர்களை நோக்கி ஓடிச் செல்கின்றார்கள். இவர்களைக் கண்டவுடன் ஏற்பட்ட அளவிட முடியாத மகிழ்ச்சியை அவர்கள் முகம் வெளிப்படுத்துகின்றது. ஓடிச்சென்ற கார்முகிலன் காயமடைந்தவனைப் பார்க்கின்றான். ஒரு கண அவதானிப்பிலேயே புரிந்துவிட்டான். நெஞ்சிலும் காலிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள். நெஞ்சறைக் குழியினுள் வெளியேறித் தேங்கிய குருதி சுவாசப்பைகளை அழுத்துகின்றது. மூச்சுவிடுவதற்கு மிகவும் கடினப்படுகின்றான். உரிய சிகிச்சை கொடுக்காவிட்டால் இன்னும் சில நிமிடங்களில் உயிர்பிரிவது உறுதி. இரத்தமும் அதிகமாக வெளியேறிவிட்டது. இப்ப முதலில் செய்ய வேண்டியது மூச்சுவிடுவதை இலகுவாக்க வேண்டும். உடனடியாக காயக்காரனை நிலத்தில் வைக்கச் சொல்கின்றான். இன்னொருவனை அவனின் முதுகை உயர்த்திப் பிடிக்கச் சொல்கின்றான். உடன் பாய்ந்து சென்று தனது மருத்துவப் பையை எடுத்து வருக்கின்றான். மேற்சட்டையை பொறுமையாக கழட்டுவதற்கு நேரம் இல்லாததால் கத்தரிக்கோலினால் வெட்டிக்கிழித்து அகற்றுகின்றான்.

எவ்வித வலி நிவாரணியும் கொடுக்கப்படவில்லை. இன்னொருமுறை காயத்திற்கு பக்கத்திற்குரிய கையை உயர்த்திப் பிடிக்கச் சொல்கின்றான். பக்கவாட்டாக நடுப்பகுதியில் இரு விலாவென்புகளுக்கு இடைப்பட்ட தோலை வெட்டுகின்றான். அவ்வெட்டினூடு கம்பி உட்செருகப்பட்ட றப்பர் குழாயை அழுத்தி தசைநார்களினூடு நெஞ்சறைக் குழியினுள் செலுத்துகின்றான். குழாயை உட்செலுத்தியவண்ணம் கம்பியை வெளியில் எடுக்கின்றான். அதனூடு இரத்தம் வேகமாக வெளியேறுகின்றது. குழாயை மடக்கிப் பிடித்தவன் அதன் வெளிமுனையில் பையுடன் கூடிய இன்னொரு குழாயைப் பொருத்துகின்றான். இப்பொழுது குருதி அப்பையினுள் நிரம்புகின்றது. மேற்படி றப்பர் குழாய் கழன்று விடாதிருக்க நைலோன் ஊசிநூலினால் அதனைத் தோலினோடு சேர்த்து கட்டுகின்றான். மறுகையை எட்டிப் பார்க்கின்றான். அதில் 'வென்புளோன்' போடப்பட்டுள்ளது. தலையை ஆட்டியவன், தனது மருத்துவப் பையினுள் இருந்து இரத்தம் சேகரிக்கும் பையை எடுக்கின்றான். அதனூடு இணைக்கப்பட்டிருக்கும் ஊசியை ஏற்கனவே இரத்தம் நிறைந்திருக்கும் பையினுள் ஏற்றுகின்றான். அதிலிருந்து இரத்தத்தை இந்தப் பையிற்கு மாற்றுகின்றான். இவ்வாறு சேகரிக்கப்பட்ட இரத்தத்தை அக்காயக்காரனுக்கு மீண்டும் ஏற்றுகின்றான். இவ்வாறு இரண்டு பைந் குருதி ஏற்றியவன், இரண்டு பைந் திரவ ஊடகத்தையும் ஏற்றுகின்றான். இப்பொழுது சற்று ஆசுவாசப் பெருமூச்சு விடுகின்றான்.

அப்பொழுது அணித்தலைவன் சொல்கின்றான், "டொக்டர்! நாங்கள் வேகமாக வெளிக்கிடவேணும். அவனுக்கு எங்களில ஒரு ஆள் காயம் எண்டது தெரியும். எப்படியும் எங்கள பின்தொடர்ந்து வந்துகொண்டிருப்பான். இடையில அடிக்கிறத்துக்கு ரீமை அனுப்பியிருப்பான்." நிமிர்ந்து பார்த்தவன் ஐந்து நிமிடங்கள் பொறுக்கச் சொல்லி சைகை செய்தவன், கால் காயத்தைக் கவனிக்கின்றான். என்பு சிதைந்துள்ளது. நோநிவாரணி கொடுத்தவன் காலிற்கு மட்டை வைத்து அசையாமல் கட்டுகின்றான். நாடித்துடிப்பு, சுவாசவீதம் என்பவற்றை அவதானிக்கின்றான். உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதை அவன் முகம் பிரகாசிப்பதன் மூலம் வெளிப்படுத்துகின்றது. இப்பொழுது சற்று வேகம் குறைத்து நுண்ணுயிர்கொல்லி மருந்துகளை ஏற்றுகின்றான். 'சரி போகலாம்' என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டுகின்றான்.

மேற்படி பின்தள மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றான். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் தப்புகின்றான். ஆனால் சில நாட்களின் பின்னர் நடைபெற்ற பதுங்கித் தாக்குதல் ஒன்றில் கார்முகிலன் வீரச்சாவடைந்து விட்டான். அவனின் தனித்துவமான துணிச்சலான முடிவால் காப்பாற்றப்பட்டவன் அவனின் வித்துடலுக்கு மலர்வணக்கம் செய்கின்றான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை தவறவிட்டால் கண்டவனெல்லாம் கதவு தட்டுவான்

குயிற்பாட்டு உன்முற்றம் பரவுமென
செவி நீட்டிக் காத்திரு
சாவு வந்துன் கதவு தட்டும் வரை.
இளவேனில் காற்றுக்கு காத்திரு
புயல் வந்து முகத்தில் அறையும் வரை.
முன்னே மத்தாப்பு விரிவதைப் பார்த்திரு
பின்னே உன்னைப் புதைக்க
குழி வெட்டும் வரை.
வானவில்லை வடிவு பார்
அவர்களுன்னை அம்மணமாக்கும் வரை.
சமாதான யாகத்துக்கு தீயா வளர்க்கிறாய்?
சந்தனப் புகை மூக்கு நுளைந்து
மூச்சுத் திணறப் போகுது பார்.
சமாதானப் பாடல் சந்தோஷமானதுதான்
இசையமைத்தவன் யாரெனத் தெரியும்வரை.
அமைதிப் பாடல் ஆனந்தமானது
எவரும் பாடலாம்
எல்லோரும் உச்சரிக்கலாம்
வாய்பொத்த எவரும் வரமாட்டார்.
பலஸ்தீனத்திலும் முன்னரிந்தப் பாடல் கேட்டது
எத்தனை காலம் நீடித்தது?
ஆப்கான் மண்ணிலும் இப்பாடலே பரவியது
என்ன நடந்தது?
ஈராக்கிலும் இதே பாடலைப் பாடியபடிதான்
குண்டு போட்டன விமானங்கள்.
வானத்திலெழுந்த பாடல் பூமிக்கு வரமுன்
எண்ணைக் கிணறுகள் உறுஞ்சப்படுகின்றன.
பாடலுக்குப் பதிலாக இப்போ ஒப்பாரி
வாசலெங்கும் காவலரண்.
அடங்க மறுத்து நிமிரும் போதெல்லாம்
காற்றின் திசையெங்கும் சமாதானப்பாடல்.
ஆக்கிரமிப்பாளரின் கையிற்தான் அமைதிப் பாடல்.
அது மனதை வருடிச் செல்லும்,
வசமிழக்கச் செய்யும்,
கேட்பவர் கிறு கிறுத்துப் போவர்.
வித்தியாசமானது இந்த வெண்புறாப் பாடல்
தேவையெனில் போடுவர்
அலுவல் முடிந்ததும் நிறுத்துவர்
மற்றவர் தாளம் போடவேண்டும்.
சமாதானப் பாடல் இதமானது
அற்புதமானதும் கூட.
போரென்றாற் தானே பொல்லாப்பு
சமாதானம் பாடுவதில் சங்கடமில்லை.
பாடுங்கள்
எல்லோரும் பாடுங்கள்
பாடுங்கடா டேய்
பாடித் தொலையுங்கடா.
காடு வெட்டிக் களைத்தவன் பற்றி
கவலை எதற்கு?
வீடு கட்டவும் விறகுக்கெரிக்கவும்
வேண்டிய மரங்கள் கிடைத்தன.
அவரவர் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு
வெட்டியவனையும் மிதித்துக் கொண்டு
வீடு செல்லுங்கள்.
இப்போது இதுதானே நடக்கிறது.
நட்ட மரத்தில் சின்ன அரும்பு கட்டியதும்
பழம் தின்னும் கனவிலா படுத்திருக்கிறாய்
சின்ன இளசுகளைப் புதைத்த இடத்தில்
இன்னும் புல்கூட முளைக்கவில்லை
எந்த நோவுமறியாதவரெல்லாம்
சமாதானம் பாடச் சபையேறியுள்ளனர்.
இறுக மூடிய கதவுக்குப் பின்னே
ஏழு வருடங்கள் இருந்தாய்
எவர் உனக்காகப் பேசினர்?
எவர் உனக்கேதும் வீசினர்?
எவர் வந்துன்னை ஆற்றினர்?
தொட்டுத் தழுவ வேண்டாம்
எட்டிப் பார்த்தார்களா எவரும்?
இன்று வந்து குவிகின்றனர் வாசலுக்கு
நீ செங்கம்பளம் விரித்து மகிழ்கிறாய்.
போர் நிறுத்தமென்றதும் வந்து போகின்றவரின்



வேர்களை அறிந்து கொள்.
எல்லோர் முகத்தின் பின்னும் இன்னொரு
முகம்.
ஏஜண்டின் பாடலைப் பாடியபடி
வியாபாரிகள் வீதியில் இறங்கியுள்ளனர்.
எவரையும் இனம் காண்பதில்
கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொள்.
விதானையும், வீடு கொளுத்தியவனும்
ஒரே மாதிரி இருந்தால்
சாட்சி சொல்பவனுக்கு சங்கடம் வரும்.
நீ காலத்தைக் கைதவற விடும்போது
கண்டவனெல்லாம் கதவைத் தட்டுவான்.
இப்போது இது தானே நடக்கிறது.
ராஜதந்திர மென்பது
தொடங்கிய இடத்துக்கே திரும்புதல் அல்ல.
அடங்கிப் போவதிலும் பார்க்க
அழிந்து போவது மேலானது.
வழுக்கி விழுந்தவர்கள்
விழுந்ததுக்கு வியாக்கியானம் சொல்லலாம்
எழுந்திருக்க முடியாதது தான் இழிவு
உலகம் உன்பக்கம் வருமென நம்பாதே
பூமியென்றும் பலவானின் பக்கம் தான்.
அரசுகள் எல்லாமே ஒரே அச்சில்
வார்த்தவை
பெரிய மாற்றங்களேதும் கிடையாது.
அடக்குமுறையாளரே
அரசமைக்கும் வல்லமை பெறுகின்றனர்.
விடுதலையை அவர்களிடம் எதிர்பார்க்கர்தே
தருவதற்கல்ல அவர்கள் சமாதானம்
பாடுவது.
கரையச் செய்தபின்
உன்னைக் கடித்துத் தின்பதற்கு.
முந்தானையைச் சரியவிட்டு
மேனகைகள் திரியும் காலம்
கவனம்.
ஆணழகன் போல அலிகள் திரிகின்றனர்
யாரும் மயங்கி விடாதீர்.
நெருப்பாற்றைக் கடந்து விட்டு
தப்புத் தண்ணீரிலா தள்ளாடுவது?
தீச்சுவாலையையே தின்று செமித்தவனே
பேச்சுவாத்தையின் போது போர்த்துக்
கிடப்பதேன்?
எந்தத் தேவதூதரையும் எதிர்பாராது
நீயே எழு
நீயே நட
வல்லமையை வளர்த்துக்கொள்.
அப்பத்தை பங்கிட்டுக்கொள்ள
குரங்கை நீதிபதியாக்கியோரின்
முன்னுதாரணங்கள் எச்சரிக்கின்றன
கவனத்துக்கு எடுத்துக்கொள்.
இன்னும் காலம் கடந்துவிடவில்லை
நம்பிக்கையுடன் நாட்களை எடு.
உன் வம்சபூமி வணங்கா மண்ணடா
நந்திக்கடல் வற்றாதிருக்கும் வரை
பாலியாற்றுப் படுக்கையில் நீர்சுரக்கும் வரை
ஜமுனா ஏரியில் நீர் நிறையும்வரை
உன் நாடி நரம்பின் சூடாறாது.
விடுதலை நெருப்பை நெஞ்சில் மூட்டி
காங்கைச் சுடரெனக் காட்சி தருவாய்.
நீ சோதிப்பிளம்பாய் தோன்றும் வரை
உன்னைப் போரிலும்; வாதிலும்
எவனடா ஜெயிக்கக் கூடும்?
கைக்கு வரும் காலத்துக்குக் காத்திராதே
உனக்கான காலத்தை -வனைந்தபடி

— வியாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி காலத்து மரணங்கள்





> **வன்னியின் மூலை முடுக்குகளெல்லாம் களத்தில் வீழ்ந்தவரின் உடலங்கள் வந்தன. பெரும் யுத்த காலத்தில் வருவதுபோன்ற உயிரிழப்புக்கள் அந்த அமைதிக்கான காலத் தில் நிகழ்ந்தன. அன்று பெரும் அவலத்தில் வன்னி வெந்துபோயிருந்தது. சமாதானத்திற்காக் தாம் முன்வைத்த ஆத்மார்த்தமான சந்தர்ப்பம் இறுதியில் தமக்கான மரணக் கால்வாயாக சிங்களத்தால் மாற்றப்பட்டதாக மக்கள் உணர்ந்தார்கள்.**

நடக்கக் கூடாதவையே மீண்டும் மீண்டும் எம்முன் நிகழ்கின்றன. இது எத்தனையாவது தடவையென்பது எனக்குச் சரியாக நினைவிலில்லை. அதை எண்ணிப் பார்க்கவும் அப்போது முடியவில்லை. ஆனால் அந்தப் பரபரப்பான மணித்தியாலங்களின் முடிவு எம்முள் ஆழமான வடுக்களை ஏற்படுத்திவிட்டது. உண்மையில் அந்த இழப்புகள் எம்மை ஒரு வகை விரக்தி நிலைக்கு இட்டுச் சென்றுதான் விட்டன.

அன்று 16.03.2003 மதியம். இரண்டாவது தடவையாகவும் கடலில் எமது தோழர்களைப் பறிகொடுத்த செய்தி அனலாய் பறந்து வந்தது. நெடுந்தீவில் நடந்தது போலல்லாது இம்முறை எமது வீரர்கள் காக்கப்படுவார்கள் என்ற அதீத நம்பிக்கையுடன்தான் நாங்கள் காத்திருந்தோம். ஆனாலும், எமது நம்பிக்கைகள் அபத்தமானதாய்ப்போக, கடலலைகள் ஓங்கி ஓங்கி எம் இதய அறையில் அறைந்தன. வருடக் கணக்காய் கடலோடிக் கடலோடி தேசத்திற்குழைத்த வீரர்கள் இனி எம்மிடம் வரவே மாட்டார்கள். தளபதி ரஞ்சனுடன் தாய்மண் தேடிவந்த இன்னும் பத்து வேங்கைகள்....

அந்தக்கணத்தில் தலைவரைத்தான் முதலில் நினைத்துக்கொண்டேன். சில மாதங்களின் முன்னர் ஒரு இனிமையான மாலைப்பொழுதில் மனம் விட்டுக் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் உதிர்ந்த வார்த்தைகள் வேதனைகளை கிளறியபடி மீண்டும் எழுந்தன. "இந்தச் சமாதானத்தின்மூலம் எத்தனை பிள்ளைகளின் உயிர்களை நான் காப்பாற்றியிருக்கிறேன். இப்போது எனது மனம் எவ்வளவு ஆறுதலடைந்திருக்கிறது. இனியாவது சிங்களவர்கள் எங்களைப் புரிந்துகொள்வார்களா?" அந்த வார்த்தைகளை அவர் பகிர்ந்தபின் வேதனைதரும் சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்துவிட்டன. முதலில் காஞ்சிரங்குடா, பின்னர் நெடுந்தீவு இப்போது சர்வதேசக்கடல்.

போர்க்களங்களில் நாளும் பொழுதும் உயிர்விலை செலுத்திப் போரிட்டவர்கள் நாங்கள். அதனால்தான் அந்த உயிர்களின் பெறுமதியை ஆத்மார்த்தமாகப் புரிந்து வைத்திருக்கின்றோம். இப்போது சமாதானமும் மரணங்களை கொண்டுவரும் போது அவற்றை அவ்வளவு இலகுவாக ஏற்றுக்கொள்ள எங்களால் முடியவில்லை.

கடலில் இந்தத் துயரம் நடப்பதற்கு சில நாட்களின் முன்னர்தான் விடுமுறையில் வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போது, முன்னர் தலைவர் அவர்களிடம் நான் கண்ட உணர்வுகளை இரண்டாவது தடவையாக எனது அம்மா வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். "இப்பதான் ஓரளவு நின்மதியாய் மூச்சு விடுகிறம். முந்தியெண்டால் ஒவ்வொரு நாளும் செய்தி கேக்கைக்குளளையும், பேப்பர் படிக்கைக்குள்ளையும் என்ரமனம் என்ன பாடுபடும்! கடவுளே! எங்கேயாவது சண்டையாம் எண்டால்...... வீரச்சாவாம்........."

விடுமுறை முடிந்து என்னை வழியனுப்பி வைத்தபோது ஒருபோதும் இல்லாத நின்மதியை அம்மாவிடம் கண்டேன். ஏதோ ஊர் உலகத்திலுள்ள தெய்வங்கள் எல்லாவற்றையும் கொண்டு தன் பிள்ளையை இந்த சமாதான காலம்வரை காப்பாற்றிவிட்டதான உணர்வு அவருக்கு இருந்தது.

அம்மாவை புரிந்துகொண்டபோது எனக்கும் எதை எதையோ கதைக்கவேண்டும்போல் இருந்தது. ஆனால் அந்த இறுதி நேரத்தில் அவரின் நின்மதியை குழப்பிவிட்டு வருவதில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை. எனது மனதில் தோன்றியவைதான் யதார்த்தமானவை என்றாலும்கூட இந்த நேரத்தில் அவை அம்மாவிடம் சொல்லக்கூடியவையாக இருக்கவில்லை.

* * *

அப்போது எனக்குப் பத்து வயதுதான் இருக்கும். இந்தியப்படை எம்மண்ணுக்கு வந்திருந்தது. அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் இனிச் சண்டை நடக்காது என்றும் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும் பெரியவர்கள் கதைப்பார்கள். அதனால்தானோ என்னவோ இந்தியப் படையினருக்கு வீதியில் நின்று கையசைத்துக் காட்டுவதில் எமக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. ஆனால் தியாகி திலீபன் துடிதுடித்து மரணித்தபோது அவருக்கு மலர்தூவிய கைகள் பின்னர் இந்தியப் படைகளுக்காக கையசைப்பதற்கு எழவில்லை.

அதன் பின்னர் சில நாட்களிலேயே மூத்த தளபதிகள் பலியான செய்தியை 'ஈழமுரசு' பத்திரிகையில் பார்த்துவிட்டு வீட்டில் எல்லோரும் கவலையடைந்திருந்ததும், பின்னர் யுத்தம் வெடித்ததும் என்னுள் ஓடிவந்தது. அதன் பின்னர் எத்தனை சம்பவங்கள் நடந்துவிட்டன.

அது இரண்டாம் ஈழப்போர் காலம். நான் சிறுவனாக இருந்தேன். இயக்கம் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்திருப்பதாக செய்திகள் சொல்லிக்கொண்டிருந்தன. வீட்டிலும் பெரியவர்கள் அப்பாவுடன் அது பற்றித்தான் விவாதிப்பார்கள். ஆனால் சில நாட்களிலேயே அயலில் இருந்த எமதூர் பாடசாலைக்கு ஆனையிறவில் வீரச்சாவடைந்த போராளியொருவனின் வித்துடல் வந்தது. என்றுமில்லாத பெரும் மக்கள் கூட்டம்; ஊரிலுள்ள எல்லா மக்களுமே திரண்டிருந்தார்கள். அப்போது அந்த உறவுகளின் ஒப்பாரிகள் சமாதானத்திற்கு ஏங்கியிருந்த எல்லோர் மனங்களிலும் ஓங்கியறைந்தன. எனது சின்ன உள்ளத்திலும் அந்தக் கதறல் அப்படியே பதிந்துவிட்டது. இப்படித்தான் இயக்கத்தின் முக்கிய தளபதி லெப்.கேணல் மல்லியைக் கொலைசெய்து அவரது தலையை வெட்டி சிங்களப் படைகள் வெறியாடியதாகவும் அப்போது பத்திரிகைகளில் படித்தேன்.

இதுபோன்றதொரு அவலத்தை கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளின் பின்னர், அண்மையிலும் நான் அனுபவித்தேன். அது இரண்டாயிரத்தின் பிற்பகுதியில் வந்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த காலத்தில்.

• அந்த நாட்களின் ஆரம்பத்தில் வன்னியே மகிழ்ந்திருந்தது. தம்மை சூழ்ந்துகொண்டு நாலாபுறத்தாலும் நெருங்கிவந்த எதிரிகளை அடித்து விரட்டிவிட்டு அவர்கள் அடுத்தவற்றிற்காய் நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். அப்போதுதான் தலைவரின் ஒருதலைப்பட்சமான மோதல் தவிர்ப்பு அறிவிப்பு வந்திருந்தது.

மல்லாவியில் ஓரிரு தடவைகள் உலங்கு வானூர்திகளும் இறங்கிச் சென்றிருந்தன. வெளிநாட்டுக்காரர்களினது வருகையால் உண்மையான சமாதானத்திற்கான வாய்ப்பு ஏற்படலாமென்று மக்கள் நம்பினர். ஆனால் புலிகள் இயக்கத்தின் போர் ஓய்விற்கான அழைப்பை சிங்களம் ஏற்றுக்கொள்ளாதது நம்பிக்கையீனத்தைக் கொடுத்தது. இயக்கத்தின் யுத்தநிறுத்த அறிவிப்பை அதன் பலவீனத்தின் அறிகுறியாகக் கருதி, அதைத் தமது பலத்தை நிலைநாட்டுவதற்கான சந்தர்ப்பமாக மாற்ற சிங்களம் முனைந்தது. அதனால் பெரும் சண்டைகள் வெடித்தன.

வன்னியின் மூலை முடுக்குகளெல்லாம் களத்தில் வீழ்ந்தவரின் உடலங்கள் வந்தன. பெரும் யுத்த காலத்தில் வருவதுபோன்ற உயிரிழப்புக்கள் அந்த அமைதிக்கான காலத்தில் நிகழ்ந்தன. அன்று பெரும் அவலத்தில் வன்னி வெந்துபோயிருந்தது. சமாதானத்திற்காக தாம் முன்வைத்த ஆத்மார்த்தமான சந்தர்ப்பம் இறுதியில் தமக்கான மரணக் கால்வாயாக சிங்களத்தால் மாற்றப்பட்ட தாக மக்கள் உணர்ந்தார்கள்.

தலைவர் மீண்டும் மீண்டும் மோதல் தவிர்ப்பை பிரகடனம் செய்தார். சிங்களமும் மீண்டும் மீண்டும் யுத்தப்பிரகடனம் செய்தது. உலகமும் கைகட்டிப் பார்த்திருந்தது. போராளிகளதும், தமது பாதுகாப்பிற்காக களம் வந்த மக்களதும் உடல்கள் ஊர்களுக்கு வந்துகொண்டே இருந்தன. மக்கள் பொறுமையிழந்து போயினர். புலிகள் இயக்கம் தமது அறிவிப்பை பின்வாங்கவேண்டும் என்று விரும்பினர்.

யாழ்ப்பாணத்தை மீட்பதற்காக எம்மால் தென்மராட்சியூடாகத் திறக்கப்பட்ட களமுனை மீண்டும் எதிரியின் கைகளுக்குச் சென்றுவிட்டது. இப்போது ஆனையிறவை மீண்டும் ஆக்கிரமிப்பதற்காக எதிரிகள் ஒருமித்து முனைநதனர். வன்னியின் மக்கள் பெருந்தொகையாக களம் புகுந்தனர். இம்முறை மோதல் தவிர்ப்பைக் கைவிட்டு எதிரியை வலுவுடன் தடுத்து நிறுத்தவேண்டுமென மக்கள் விரும்பினர்.

எமது மோதல் தவிர்ப்பு அறிவிப்பு பின்வாங்கப்பட்டு எதிரியின் 'தீச்சுவாலை' முறியடிக்கப்பட்டதன் பின்னர்தான் எதிரியும் சமாதானத்திற்கு வந்தான். எனினும் அன்று நாம் பலவீனமாகக் கருதப்பட்டபோது எதிரி எமக்கு மரணங்களை மட்டுமே தருவதற்குத் தயாராக இருந்ததை எம்மால் இன்றைக்கும் மறக்கமுடியவில்லை.

இப்போது உடன்படிக்கை வந்துவிட்டது. என்றாலும் எதிரி தன் வெறித்தனத்தைக் காட்டிக்கொண்டுதான் இருக்கிறான். மரணங்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

* * *

கடல் மரணங்களின் செய்தி ஊர்களெங்கும் பரவியது. 'யாருடைய பிள்ளைகளோ......' என மக்களெல்லாம் ஏங்கியிருந்தார்கள். போராளிகளின் பெற்றவரெல்லாம் மீண்டுமொருமுறை கதறித்துடித்துக்கொண்டு இருந்தார்கள். போராளிகளால் அந்த இழப்புகளை ஜீரணிக்க முடியவில்லை. அந்த மரணங்களால் எமது தலைவரும் ஆத்திரமடைந்திருப்பதை அறிய முடிந்தது.

ஒரு மூத்த போராளியிடம் எனது உணர்வுகளை பகிர்ந்துகொண்டிருந்தேன். சில மாதங்களின் முன்னர் தலைவரிடமும் எனது அம்மாவிடமும் பெற்ற உணர்வுகளை அவருக்குச் சொன்னேன். நான் அனுபவித்த அமைதிக்காலத்து அவலங்களைப்பற்றிச் சொன்னேன். அவரும் தனது அனுபவங்களை என்னுடன் பகிர்ந்தார்.

ஆரம்ப காலங்களில் அமைதி வழியில் உரிமைகேட்டுப் போராடிய கதைகளைச் சொன்னார். அவற்றின்போது தாம் அனுபவித்தவற்றைச் சொன்னார். வெட்டப்பட்டது, எரிக்கப்பட்டது, கொதிக்கும் பீப்பாய்களுக்குள் போடப்பட்டது, மார்பகங்கள் வெட்டப்பட்டது, குறி சுடப்பட்டது, சிங்கள நகரங்களிலிருந்து ஏதிலிகளாய் விரட்டப்பட்டது..... என எல்லாவற்றையும் கதை கதையாகச் சொன்னார். எல்லாவற்றிலிருந்தும் என்னால் ஒன்றைமட்டும் புரிந்துகொள்ள முடிந்தது. சிங்களவர்கள் போரின்போது மட்டும்தான் மரணங்களைச் சந்திக்கிறார்கள். தமிழர்களோ போரின்போதும் கொல்லப்படுகிறார்கள் சமாதானத்தின் போதும் கொல்லப்படுகிறார்கள்.

**–அகிலன்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)




கேற்றப்பெற்றது. இரண்டாம் நாள் இறுதி நிகழ்ச்சியாக தர்மசிறி பண்டாரநாயக்காவின் 'றோஜனத்துப் பெண்கள' என்னும் சிங்கள நாடகம் மேடையேற்றப்பெற்றது.

மனமே நாடகம் பௌத்த சமயத்தின் நிலையாமைக் கொள்கையை வெளிப்படுத்தியது. அத்துடன் பக்குவம்மிக்க மரபு இசைக் கருவிகளின் பின்னணி இசை மீட்டலில், பொருத்தமான ஆட்டங்களுடன் இனிமையான மரபுப் பாடல்களுடன் விளங்கிய இந்நாடகத்தின் அளிப்புமுறை எல்லோரையும் கவர்ந்தது.

கி.மு 480-406 வரையிலான காலகட்டத்தில் எதென்ஸ் நகரில் வாழ்ந்த யறிபிடிஸ் அவர்களால் எழுதி மேடையேற்றப்பெற்ற நாடகம் றோஜனத்துப் பெண்கள். அக்காலத்தில் நடைபெற்ற யுத்தம் இழைத்த அநியாயத்தை அனர்த்தத்தை முன்வைக்கும் அவலச்சுவை நாடகம் இது. இத்தீவில் சிறிலங்கா இராணுவ அனர்த்தங்களாக எழுந்த கொடுமைகளையும் உணரச்செய்து எக்காலத்திலும் யுத்தம் கொடிது எனும் செய்தியை முன்வைக்கிறது. பிரமாண்டமான காட்சியமைப்பும், ஒளிச் சேர்க்கைகளும், நீண்ட வசனங்களும், இரம்மியம் மிக்க கோரஸ் பாடல்களும், சிறப்பான பாத்திரங்கள், பொருத்தமான நடிப்புகள் போன்றவற்றாலும் இந் நாடகம் பிரம்மிப்பை ஏற்படுத்தியது.

இந்த இரண்டு நாடகங்களையும் இந்த விழாவில் மேடையேற்றியதன் மூலம், இசை,நடன,நாடகவிழாவின் உள்ளடக்கம் விசாலம் மிக்கதாக வெளிப்பெறுகிறது.

இவ்விழாவில் நடந்தேறிய இன்னொரு இணைப்பையும் இனம்காணவேண்டியதும் அவசியம்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு,திருமலை, வன்னி ஆகிய இடங்களில் இருந்து வந்த நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் அரங்கேறின. இவ்விடங்களில் இருந்துவந்து இந்த விழாவில் இடம்பெற்றன என்பதற்கப்பாலும் இன்னொரு விடயமுண்டு. இராணுவத்தின்பிடிக்குள் அகப்பட்ட சூழ்நிலையில் இருந்து கொண்டு தயாரிக்கப்பெற்றவைகள் என்றும; இராணுவத்தின் படையெடுப்புக்களுக்கு முகம் கொடுத்துப் பஞ்சம், பசி,பட்டினி, நோய் என்னும் வருந்தும் பிடிகளுக்குள் நின்றுகொண்டும், தேவை, அவசியம், என்பவற்றின் பேராலும், அவலத்தில் உழலும் வன்னி மக்களின் மகிழ்வுப் படலத்திற்கு வேறு எந்த வடிகாலும் இல்லை என்றதன் காரணத்தினாலும், நொந்துபோன மனங்களையும், சோர்ந்துபோன கரங்களையும், உசார்ப்படுத்திக் கொண்டு, எந்த வசதியின் துணையுமின்றி தட்டித் தட்டியாக்கப் பெற்றவைகள் என்றும் இருநிலைக் கலை நிகழ்ச்சிகள் இணைந்தது மட்டுமல்ல குசலமும் விசாரித்துக் கொண்டன.

புதிய பாய்ச்சலின் துணிச்சலையும், போரிடும் பண்பின் முன்வைப்பையும், நெருக்கடியின் விளைவாகப் பிறந்த வேகத்தையும் வன்னிக்கலை நிகழ்ச்சிகள் கொண்டிருந்தனவென்றால; மரபுவழிக் கலைநிகழ்ச்சிகளின் சாஸ்த்திரீகத் தன்மைகளையும், அழகியல் அம்சங்களையும்,அவைகளுக்கேயுரிய ஒவ்வொன்றறகுமான உருவங்களையும், உள்ளடக்கங்களையும, அமைதிகளையும் மற்றைய கலை நிகழ்ச்சிகள கொண்டிருந்தன. இவற்றை ஒன்றாக ஒரு விழாவில் கண்டபோது ஒரு திருப்தி பிறந்தது.

புதிய சவால்களைச் சந்திக்கும் கலை நிகழ்சிகளையும் படைக்க முடியும். கலையின் நுணுக்கக் கூறுகளை சாஸ்த்திரீய நூலால் பிணைக்கப் பெற்றுள்ள, கர்நாடக சங்கீதம், பண்ணிசை, தமிழிசை, பரத நாட்டியம், நாட்டார் பாடல், வாத்தியப்பிருந்தா போன்றவற்றையும் இடையறாமல் தொடர முடியும் என்ற நம்பிக்கையே திருப்தியைத் தந்தது.

மேடையேறிய ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் தமக்கேயுரிய சிறப்புக்களோடு மிளிர்ந்தன. ஆனால் சில நிகழ்ச்சிகள் தாம் பிறந்ததற்கான காரணத்தையும் முன்வைத்தன. இந்த வகையில் யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் அரங்கேற்றிய திரு. தேவானந்தின் "அக்கினிப் பெருமூச்சு'' நாடகத்தை இனங்காட்டாமல் இருக்க முடியவில்லை. அந்நாடகத்தில் வரும் கதைமாந்தர்கள் விடும் அக்கினிப் பெருமூச்சை உணரும் அதே நேரத்தில் அந்நாடகம், அதனை நடத்தியோர் இணைந்துவிடும் அக்கினிப் பெருமூச்சையும் உணரமுடிகிறது. கலைஞனுக்கும், சமூக நடப்புகளுக்கும் தொடர்பில்லை, கலைஞனின் வேலை கலைக்காகக் கலை படைப்பதுதான் என்னும் இன்றைய வாதத்தை இந்நாடகம் தன் காலில் போட்டு மிதித்ததோடு, தன் சமுக மாந்தர்கள் பலர் தத்தமது காணாமற் போனோருக்காக நடத்தும் தேடுதல் பணியை தன்தோளிலும் போட்டுக்கொண்டு நாடகம் நிமிர்ந்து நடக்கிறது. அதன் நடைக்குப் பாதை அமைத்துக்கொடுத்த மானுடத்தின் தமிழ் கூடல் இரண்டை நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டியது ஒவ்வொரு மானிடநேய மனிதர்களின் கடமையாகும்.

விழாவின் ஒவ்வொருநாளும் இடம் பெற்ற, வரவேற்புரை, தலைமையுரை, கருத்துரை,சிறப்புரை என்பனவற்றிக்கும் அழைக்கப் பெற்றவர்கள் கலந்து கொண்டு விழாவிற்கும் காலத்திற்கும் பொருத்தமான கருத்துக்களை முன்வைத்து உரையரங்குகளின் தரத்தையும் உயர்த்திக்கொண்டனர்.

தமிழ்நாட்டில் இருந்து தமிழிசைப் பாடகி ரீ.கே.கலாவை வரவழைத்துப் பாடவைத்ததின் மூலம், பாரதியின், பாரதிதாசனின், கவிஞர் காசி ஆனந்தனின், புதுவை இரத்தின துரையின் சிறந்த பாடல்களை கலாவின் இனிமையான குரலில் கேட்கமுடிந்தது. நேரம் மட்டுமட்டாக இல்லாவிட்டால் அவரை மேலும் பல பாடல்களை பாடவைத்துக் கேட்டிருக்கலாம். அது தமிழிசைக்கு நாம் கொடுக்கும் வரவேற்பை மேலும் வெளிப்படுத்தியிருக்கும்.

தமிழ்க்கூடல் இரண்டு தனது மகிமையை மாண்பினை உச்சமாக உயர்த்திக் கொண்ட இன்னொரு கைங்கரியச் செயலையும் நிறைவேற்றியுள்ளது.

எழுத்து, இசைத்துறை மெல்லிசை, கூத்து என்பவற்றில் தனிச்சிறப்புடன் மிளிர்ந்த திருமலை மாவட்டத்தின் ஆறு மூத்த கலைஞர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கி இவ்விழா அவர்களைக் கௌரவித்துள்ளது.

இவ் விற்பன்னர்களுக்கு விருது வழங்குவதற்கான விளக்க உரையின்போது, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர், "நாங்கள் உங்களைக் கௌரவிப்பதன் மூலம் எங்களைக் கௌரவப்படுத்திக் கொள்கிறோம்'' என்ற உணர்வினை வெளிப்படுத்தினார். அது ஒன்றும் கவர்ச்சிகரத்துக்காக கூறிய கருத்து அல்ல உண்மையின் வெளிப்பாடு அது.

தொடர்ந்து நடந்த யுத்த நெருக்கடிகளின் காரணமாகவோ, நவீனத்தின் கரம் பற்றிச் செல்லும் அவசரத்தினாலோ, மதிப்பும் கௌரவமும் அளிக்கப்பெற வேண்டியவர்களுக்கு, ஒரு சமுகம் அவற்றை வழங்க மறப்பது இயல்பானதே. மறந்துவட்ட அப்பண்பினை மீண்டும் தமிழ்ச்சமுகத்திற்கும் மற்றும் ஏனையோருக்கும் வலியுறுத்தி நினைவூட்டுவது போலவும், இவ்வாறான பணிகளை தொடர்ந்து ஆற்றுங்கள் என்று கேட்பது போலவும் மேற்படி கௌரவிப்பின் மூலம் தமிழ்க்கூடல் இரண்டு விண்ணப்பஞ் செய்துள்ளது. தகுதியானவர்கள் கௌரவிக்கப்பெறும்போது கௌரவத்தை வழங்குபவர்களும் கௌரவம் பெறுவார்கள். அக்கௌரவம் இசை நடன நாடக விழாவுக்குக் கிடைத்துள்ளது.

பெயர்பெற்ற மிகச் சிறந்த கலைஞர்களுக்கெல்லாம் இடம் அளித்த இவ்விழா, வளரத்துடிக்கும் ஓர் இளம் கலைஞருக்கும் வாய்ப் பளித்துப் பாடவைத்துள்ளது. கல்வி பயின்று கொண்டிருக்கும் பாடசாலை மாணவியான செல்வி ஹம்சத்வனி பாஸ்கரன் அவர்களே அவ் விளங்கலைஞர். அவர் பாடிய பத்துப் பாடல் களும் மிகச்சிறப்பாக இருந்தன. விளையும் பயிரின் முளைதிறன் முகத்தை ஹம்சத்வனியிடம் காண முடிகிறது. இவ்விளங்கலைஞருக்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக விழா ஏற்பாட்டாளர்களைச் சிறப்பாகப் பாராட்டலாம்.

வன்னிவாழ் மக்களுக்கு மகிழ்வூட்டி, உணர்வூட்டி அவர்களின் நாடி, நரம்பு, நாளங்களில் தன்மான உணர்வினை பாயவைத்த பல்வேறு வன்னிக் கலைநிகழ்ச்சிகளில், புதுவை அன்பனின் "கரைதேடும் ஓடங்கள" எஸ் பாலாவின் "இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா", பேபி ஆசிரியரின் "சங்கநாதம்" ஆகிய கலைநிகழ்ச்சிகள் திருமலை தமிழ்க்கூடல் இரண்டில் இடம்பெற்றுள்ளன.

கரைதேடும் ஓடங்கள் நாடகம், விவேகானந்தாக் கல்லூரியின் அரங்க மண்டபத்தின் எல்லா இடைவெளிகளையும் சுவைஞர்களால் நிரப்பிக் கொண்டதுடன், மாடியின் இருக்கைகளையும் முழுமையாக நிரப்பி இரு அருகிலும் உள்ள மாடி நடைபாதைகளிலும் நிரம்பிக் கொண்டும் சுவைஞர் கூட்டம் அலைமோதியது. புதிது புதிதாக வந்து கொண்டிருந்த சுவைஞர்களுக்கு விழாத்தரப்பினரும் கல்லூரித்தரப்பினரும் சத்த அருட்சி இன்றி இருக்கைகளை கொண்டுவந்து போட்டு அமரச்செய்த காட்சிகளும் ஒரு நாடகம் போலவே அழகியல் அம்சமாக இருந்தன. வன்னி பெற்றெடுத்த அந்நாடகத்துக்கு கிடைத்த வரவேற்பு வன்னிக்குக் கிடைத்த வரவேற்பு எனலாம். கரைதேடும் ஓடங்கள் பெற்றதைப்போலவே "இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா, சங்கநாதம் ஆகியனவும் வரவேற்பைப் பெற்றன. இவ்வரவேற்பை இசை, நடன, நாடகவிழா வன்னிக்கு பெற்றுக் கொடுத்துள்ளது.

ஒரு விழாவின் நிறைவு, அவ்விழாவில் கலந்து கொண்டோர்களை விழாவின் கருப் பொருளையொட்டிச் சிந்திக்க வைப்பதிலேயும் தங்கியுள்ளது.

இயல், இசை,நாடகம் என்னும் முத்தமிழை அனைவரும் நன்கு கேள்விப் பெற்றிருக்கிறோம். ஆனால் இது இசை நடன நாடகவிழா! இதிலும் மூன்று நிலைகள் உள்ளன."நடனத் தமிழ் என்றும் ஒரு தமிழ் ஏன் இருக்கக் கூடாது? தமிழ் ஏன் முத்தமிழுக்குள் முடங்கிக்கிடக்க வேண்டும்? தமிழ் இன்று கணினித் தமிழ் என்னும் வளர்ச்சியையும் அல்லவா அடைந்துள்ளது!" இவ்வாறு விழாவில் கலந்துகொண்ட பலரும் கிடைத்த இடைவேளைகளின்போது கேட்க முடிந்தது.

முரண்பட்டு நின்ற இரு இனப்பக்கத்தாரும் இன்றைய சமாதான காலத்தில் பரஸ்பரம் தத்தமது நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தவேண்டியது அவசியம். இதமான பார்வை, இனிமையான பேச்சு, வசீகரமான பார்வை, நம்பிக்கையூட்டும் வெளிப்படுத்தல்கள் என்பன அவற்றைக் தருவிக்க கிடைத்தவர்க்கு மனக்குளிர்வினை ஊட்டும். உறவுக்கை கொடுப்பிற்குத் தென்பூட்டும். இத்தகைய நிலைப்பாடுகளை தமிழ் கூடல் இரண்டு வெளிப்படுத்தி மேலோங்குகிறது.

ஒரு விடயத்தில் அதன் நிறைவேற்றத்திற்கு பங்குகொள்ளும் இருபக்கத்தாரில் எந்தப் பக்கத்தினர் உசிதமான போக்கையும்,உவந்த மனப்பாங்கையும் வெளிப்படுத்துகிறார்களோ, அவர்கள் அவ்விடயத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர் எனலாம்.

இத்தீவில் இன்று முன்னெடுக்கப் பெறுகின்ற சமாதானத்தின் தொடர்ச்சிக்கும், நிரந்தர சமாதானத்தின் அடைவிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் பக்கத்தவர்கள் எத்த கைய பங்காற்றலைச் செய்கிறார்கள்?, எத்த கைய மனப்பாங்கைக் கொண்டுள்ளார்கள் என்பதை கலை பண்பாட்டுக்கழகம் தலைமை தாங்கிச் செய்யும் மானுடத்தின் தமிழ்கூடல் விழா உணர்த்துகிறது.

இவ்விழாவை முன்னெடுப்பதற்கு தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்துதலும் அறிவுரைகளும் உண்டு. தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் ஆதரவு உண்டு. என்பதை கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளரின் கருத்து முன்வைப்புகளில் இருந்து அறியமுடியும். எனவே தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்த நடவடிக்கைகளை நன்கு கடைப்பிடிக்கிறார்கள் என்பதை, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறாது இருக்கிறார்கள் என்பதை, சிறிலங்கா இராணுவம், சிறிலங்கா கடற்படை என்பவற்றின் யுத்தநிறுத்த மீறல்களின் மத்தியில் பொறுமை காத்திருக்கிறார்கள் என்பதன்மூலம் மட்டுமல்ல மானுடத்தின் தமிழக்கூடல் மூலமும் அவற்றை வெளிப்படுத்துகின்றனர்.

உண்மையில், இன்றைய வரலாற்றுத் தேவைக்கு ஆற்றும் தொண்டை கலை பண்பாட்டுக்கழகம், விடுதலைப்புலிகளின் வேறு துறையினரையும், இயக்கத்தின் பல்வேறு பிரிவினரையும் இணைத்து செயற்படுத்திவருகிறது. இதன்மூலம் புலிகள் இயக்கத்தின் பாத்திரத்தையும் வெளிப்படுத்துகிறது. இவற்றோடு சமாதானத்திற்கு சாவு மணி அடிக்க முயலும் சக்திகளையும் அது அம்பலப்படுத்துகிறது. எது எப்படியோ இன்னும் தமிழ்பேசும் மக்கள் தமது சுதந்திர வாழ்வுக்கு தொடர்ந்தும் என்னென்ன பங்காற்றுதலைச் செய்யவேண்டும் என்பதையும் அது முன்வைக்கிறது, வேண்டுகிறது-உணர்த்துகிறது.

இசை நடன நாடகவிழாவின் இறுதி நாளில் புதுவை இரத்தினதுரை அவர்கள் தனது முடிவுரையில் இவ்விழாவில் கலந்து கொண்ட, பங்காற்றிய, ஒத்துழைத்த, உறுதுணை வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு மானுடத்தின் தமிழ்க்கூடல் மேலும் பல இடங்களில் நடக்கும் என்பதையும் தெரிவித்தார். அடுத்த நாள், வந்தோரை வரவேற்ற அந்த காலாச்சார மண்டபத்திலேயே வழியனுப்பி வைக்கும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. அடுத்தடுத்த மானுடத்தின் தமிழ்க் கூடல்களிலும் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்ற யாசிப்போடு வழியனுப்பிவைக்கும் கடமை நிறைவேறியது.



யாழ்ப்பாணத்தின் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க் கூடல் ஒன்று மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும்,கலை இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும் என்ற போக்கில் நடைபெற்று ஒரு பரிமாணத்தை நிறைவு செய்தது. அது போன்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லாரியில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டு இசை நடன நாடகவிழா என்னும் இன்னொரு பரிமாணத்தை புலப்படுத்தியுள்ளது. அடுத்து நடக்கவிருக்கும் மானுடத்தின் தமிழ்க்கூடல்கள் என்னென்ன பரிமாணங்களை கொண்டிருக்கும் என்னும் கேள்வியும் அவாவும் எழுவதைத் தடுக்க முடியவில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தவர் ....
(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழிவாட்சிக்கு முடிவு காண்பதாகக் கூறி வென்றார். வென்றபின் அனைத்து கூட்டுக் கட்சிகளின் சாட்சியாக தமிழ்மக்களை வெட்டிச் சாய்த்தார். தலைவரின் காலமும் மனித ஆற்றலும் சேர்ந்த வீரியத்தின் முன் தோற்றுப்போனார். 2001-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இத்தோல்வி எதிரொலித்தது. செய்ய எதுவுமற்ற நிலையில் தேர்தல் முடிவுகளை மீளவும் நோக்கினார். ம.வி. முன்னணியின் வருகை தேர்தல் சமநிலையை குழப்புவதை உணர்ந்தார். மூன்றாவது சக்தியாக வளரும் ம.வி.முன்னணியின் வளர்ச்சியை மழுங்கடித்து எதிர்கால எதிரியை மடக்கவும் தமது குடும்ப மரபான உத்தியினடிப்படையிலும் அடுத்த கூட்டிற்கு அவர் ஆயத்தமாகின்றார். (37.19 விழுக்காட்டு வாக்குகளை பொதுசன முன்னணியும் 9.10 விழுக்காட்டு வாக்குகளை ம.வி. முன்னணியும் 45.62 விழுக்காட்டினை ஐ.தே.கவும் சென்ற தேர்தலில் பெற்றன) எதிலும் தீவிரம் காட்டி மாய்மால மாக்சியம் பேசும் ம.வி.முன்னணியை தமது முன்னைய ஏமாளி தோழமைக் கட்சிகள் போல் ஏய்ப்பது அவருக்குக் கடினமாகவிருக்கின்றது. காரியத்தில் கண்ணாகவிருக்கும் ம.வி. முன்னணியின் செயலர் தில்வின் சில்வா கூறியது போல "உறுதியானதும் தீர்க்கமானதுமான பங்கினை" அமையவிருக்கும் அரசில் கேட்பதும் அம்மையார் உலகினை ஏய்க்க முன்வைக்கும் 2000-ஆம் ஆண்டில் வரைபாக முன்வைக்கப்பட்ட புதிய யாப்பின் அதிகாரப் பகிர்வினையும் ம.வி.மு நிராகரித்தமையுமே இணைப்பு பேச்சுக்கள் இழுபட காரணம். எனினும் வாழ்க்கைச் செலவு குறையாமை, தனியார் மயப்படுத்தலின் பாதிப்புக்கள், சிங்களவர் எதிர்பார்ப்பதுபோல பேச்சுக்கள் நடக்காமை போன்றவையால் அதிருப்தி மக்கள் மத்தியில் இருப்பதை நிச்சயம் இவர்கள் பயன்படுத்தவே விரும்புவர்.

தமிழ்மக்களை கிள்ளுக் கீரையாக நினைக்கும் ம.வி. முன்னணியினரின் போக்கு எம் மக்களுக்கு வியப்பைத்தரவில்லை. குறுகிய அரசியல் இலாபத்திற்காக வெவ்வேறு தோற்றம் காட்டும் ம.வி.மு இவ்விரு பிரதான கட்சிகளின் போக்கிலிருந்து எவ்வகையிலும் வேறுபடாதென்பதை நாளைய வரலாறு உணர்த்துமென்பதும் அவர்களுக்குத் தெரியும். அதேவேளை தனியானதும் இரகசியமானதுமான அரசியல் நிகழ்ச்சி நிரல் ம.வி.மு விற்குண்டென்று சந்தேகிக்கப்படுகின்றது. சிங்கள சமுகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குள் ஆழமாக ஊடுருவ தொடங்கியிருக்கும் ம.வி.மு அதனை மறைக்க ஒரு நிழல் திரையாகவும் கால அவகாசத்தினைப் பெறவும் கூட்டினை விரும்புகின்றது. இன்றைய எதிரியான ஐ.தே. கட்சியை தனது நாளைய எதிரியான சிசு. கட்சியை பயன்படுத்தி வீழ்த்தவே அது முயல்வதோடு அதன் முன்னாள் இராணுவப் பிரிவின் தலைவர்களாலே இப்போது அது வழிநடத்தப்படுவதால் வரக்கூடிய சட்டரீதியான அடக்குமுறையிலிருந்து தப்பவும் ஒரு வழியாக இதனைப் பயன்படுத்தும் எனவும் நம்பப்படுகின்றது.

**தமிழ்மக்களை கிள்ளுக் கீரையாக நினைக்கும் ம.வி. முன்னணியினரின் போக்கு எம் மக்களுக்கு வியப்பைத் தரவில்லை. குறுகிய அரசியல் இலாபத்திற்காக வெவ்வேறு தோற்றம் காட்டும் ம.வி.மு இவ்விரு பிரதான கட்சிகளின் போக்கிலிருந்து எவ்வகையிலும் வேறுபடாதென்பதை நாளைய வரலாறு உணர்த்துமென்பதும் அவர்களுக்குத் தெரியும்.**

ஆகவே எங்கள் அன்பிற்குரியவர்களே! இது சிங்களத்தின் முடிவற்ற கதையின் இன்றைய நிலை. ஆகவே வெற்றியின் விளிம்பில் நின்ற போதும் அனைவரதும் வேண்டுகோளை ஏற்று புலிகள் வழங்கிய கால அவகாசம, சிங்களத் தரப்பிற்கு எம் மக்களின் மனவுணர்வுகளை உணர்த்தவும் அதற்கு தீர்வினைக்காணவும் சிங்களத் தரப்பாலும் ஏன் ரணிலால் கூடத் தக்கமுறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதா? இணைப்பாட்சிக்கெதிராக எழுதுவதே நாளாந்த வேலையாகக் கொண்ட சிங்களத்தின் அறிவுடமையாளர்கள், ஊடகங்கள், அதன் பத்தி எழுத்தாளர்கள், அரசியல் கட்சிகள் என்ன பாடத்தினை படித்துள்ளனர்? அன்றும் சரி இன்றும் சரி தமிழ்மக்களின் அழிவில் இன்பம் காணும் பிணம் தின்னிகளா இவர்கள்? எனவேதான் 1997-ஆம் ஆண்டின் ஆடி,ஆவணி மாதங்களுக்கான 'விடுதலைப் புலிகள்' ஏட்டில் "செத்தவர் செருப்பிற்காக காத்திருப்பவர்கள்" என்கிற தலைப்பையும் அதில் மேற்கோள்காட்டிய "உண்மையில் எதிர்காலம் என்றெதுவுமில்லை. ஏனெனில் இறந்தகால நிகழ்வுகளே திரும்ப, திரும்ப நிகழ்கின்றன." என்கிற அறிஞரொருவரின் கூற்றினையும் இங்கு நினைவுபடுத்துகின்றோம். ஆனால் ஒன்று மட்டும் திரும்ப நிகழாது. அது இம்முறையென்ன எம்முறையும் புலிகள் ஏமாறார் என்பதேயென நீங்கள் கூறுவது எமக்குக் கேட்கிறது. ●

# சமாதானம்

இந்த அமைதியின்
உதயம்........

அழுவதற்கு எமக்கு
கண்ணீர்
இல்லையென்பதற்காய் அல்ல
சுடுவதற்கு அவர்களிடம்
குண்டுகள்
இல்லையென்பதற்காய்.

தமிழினம் அழியக் கூடாது
என்ற ஆதங்கத்தில் அல்ல
பொருண்மியம்
பொறிந்துவிட்டது
என்ற பேரச்சத்தில்
இது........
எங்களிற்கான உரிமை
கொடுத்தல் அல்ல
தங்களிற்கான
கதிரை நிமிர்த்தல்.

மூழ்க இருந்த கப்பலிற்கான
முண்டு கொடுப்பு
மூச்சுத் திணறியபோதான
செயற்கைச் சுவாசம்

ஆத்ம உணர்வோடு
பிறந்ததல்ல
ஆற்றாமையால்
உருவாக்கப்பட்டது.

கைகளை உடைக்க
முடியவில்லை என்பதற்காய்
கைகுலுக்கல்
நடக்கின்றது

சாகப்போகிறோம் என்று
சிந்தித்தவரெல்லாம்
சாதனையாளரென்று
முதுகு தட்டல்

குருதி தோய்ந்து நாங்கள்
கொந்தளித்துக் கிடக்கையில்
திரும்பிப் பாராதோர் எல்லாம்
விரும்பி வந்தெங்கள் வீட்டில்

இறந்த காலத்தைப்
புரட்டிப் பாருங்கள்
நிகழ் காலம்போல
நிகழ்ந்திருக்கிறது.

சிங்கத்தின் சிம்மாசனத்திற்கு
சிக்கல் வரும்போதெல்லாம்
கிழிக்கப்பட்டது - தமிழர்
உடல்களும் ஒப்பந்தங்களும்
பழைய வரலாற்றின்
பக்கங்களில்
படித்தது இது

இன்னும்
குடியிருந்த நிலங்களில்
படையிருந்து விலகவில்லை
சிறையிருக்கும் உறவுகள்
சிறகடிக்க முடியவில்லை

விடுதலை வேட்கையின்
வேருக்கே நீர்
பாயவில்லை
மரத்திற்கு, கிளைக்கு
இலைக்கு எப்போதோ?

ஆனாலும்
அமைதியை நாங்கள்
ஆமோதிக்கிறோம்
அவதானமாக

எப்போதும்
எங்களிற்கானது
எதனையும் இழக்கோம்
சத்தியம் செய்தே
எங்கள் சரித்திர வீரரை
குழியினுள்
இறக்கினோம்.

A9 ற்குத் தாரிடுவதற்காய்
யாரும் தலை
கொடுக்கவில்லை.
அப்பிளும் அன்னாசியும்
விலை குறைவதற்காய் -
நாங்கள்
விதைகுழிகள்
தோண்டவில்லை

எங்கள் நெஞ்சில்
நிறைந்தவர்
நெஞ்சில் நினைத்ததை
கொஞ்சமும் அகற்றி நாம்
குனிந்திடமாட்டோம்

இழுக்கும் பக்கம்
சாய்வதற்கு
இழகிப்போய்
நிற்கவில்லை.
நாங்கள் - இறுகிப்போன
பலத்தோடு நிற்கின்றோம்

ஆகவே
முறைத்தால்
முறைக்கவும்
சிரித்தால் சிரிக்கவும்
எங்களால் முடியும்

ஏமாற்றும் அரசுகள்
அப்போதும், இப்போதும்
இருக்கலாம் - ஆனால்
ஏமாறும் தலைவன்
எங்களிற்கில்லை
என்ற இறுமாப்போடு
அமைதியை நோக்கி
போரோ பேச்சோ
எதுவானாலும்.........

செந்தோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சை புறக்கணிப்பது புலிகள் கடன்

சமாதானப் பேச்சின் இலாபத்தில் பங்குள்ளவர்களெல்லாம் சமாதானப் பேச்சை பாதுகாக்கவே விரும்புவர். ஒடுக்கும் தரப்பு, ஒடுக்கப்படும் தரப்பு ஆகியவற்றிற்கிடையிலான முரண்பாட்டின் தீர்விற்குரிய சமாதானம் என்ற வகையில் சமாதானத்தின் இலாபம் எனப்படுவது ஒடுக்கப்பட்ட மக்களுக்குரியதாகவே இருக்க முடியும். சமாதானத்தின் இலக்கும்கூட அவர்களை திருப்திப்படுத்துவதாகவும் தீர்வளிப்பதுமாகவே இருக்கவேண்டும்.

இதில் மறுதரப்பான அரசதரப்பு நீண்டகால யுத்தத்தைப்புரிந்து வெல்ல முடியாத யுத்தப் பின்னடைவுகளுக்கு தள்ளப்பட்டதென்ற வகையில் அதன் பொருளாதார முடக்கம் சாதாரணமான தொன்றல்ல. எனவே, சமாதான இலாபத்தின் மறுபங்கு அவர்களுக்குரியது. ஆனால் அவர்களுக்கான இலாபம் யுத்தமற்ற சூழலை உருவாக்குவதில் இருந்தே விளைவிக்கப்படக் கூடியது. விளைவிக்கப்பட வேண்டியது.

யுத்தமற்ற சூழலை உருவாக்குவதென்பது தமிழ்மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வளிப்பதிலிருந்தே உருவாகக் கூடியது. எனவே அரசாங்கத்திற்குரிய சமாதான இலாபத்தை அடைவதற்குரிய காலமும் அதுவாகத்தான் இருக்க முடியும்.

யுத்தத்திற்கும் தீர்விற்கும் இடையிலான சமாதான காலத்தின் இலாபங்களெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களை நோக்கியதாகவே அவர்களின் நோக்குநிலைப் பட்டதாகவே இருக்கமுடியும்.

ஏனெனில் அவர்களுக்கே சமா[illegible] மூலம் வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்பிக்கையூட்ட வேண்டியிருக்கும். அவர்களுக்கே யுத்தத்தை விடவும் சமாதானம் ஒளிமயமானது என்று உணர்த்தவேண்டியிருக்கும். அவர்களையே தமது எதிர்த்தரப்பின் மீதான ஐம்பது வருடகால கசப்பான அனுபவத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டியிருக்கும். ஒடுக்கப்பட்டுவந்த தமது வரலாற்று நிலையையும் இன்றைய தமது கதியையும் சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு கருணையோடு பார்த்ததினால்தான் இந்தச் சமாதானம் நிகழ்கிறது என்று அவர்களுக்கே புரியவைக்க வேண்டியிருக்கும்.

ஆனால் ஏன் அதெல்லாம் நிகழவில்லை. சமாதானம் எதைக் கொடுத்திருக்கிறது இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு?

சமாதானம் குறைந்தபட்சம் அவர்களின் வீடுகளிலேனும் அவர்கள் குடியிருப்பதை, தங்கள் நிலங்களிலேனும், கடலிலேனும் தொழில் செய்வதைக்கூட அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு அவர்களுடைய தற்காலிக நிதி அதிகார அலகைத்தானும் அங்கிகரிக்கவில்லை. இடிந்துபோன தங்கள் வாழ்வும் கட்டடங்களும் கட்டியெழுப்பப்படும் என்ற நம்பிக்கை மீண்டும் இடிக்கப்பட்டிருக்கிறது. சமாதானம் அவர்கள் மீது அவநம்பிக்கையை அள்ளி விசிறுகிறது. அவர்களின் பழைய நினைவுகளை மிண்டும் மீட்டுகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே, அவர்கள் புரிந்த யுத்தத்திற்காகவே, அவர்களுக்கு தீர்வளிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட சமாதானம் ஏன் அவர்களுக்கு எதையும் தரவில்லை?

அப்படியாயின் சமாதானத்தின் இலாபம் அவர்களுக்கன்றி வேறெங்கோ பங்கிடப்படுகிறது. ஆயின் சமாதானத்தின் இலக்கும் அவர்களிற்கு தீர்வளிப்பதாக இருக்க வாய்ப்பிருக்காதே?

**கு.கவியழகன்**

ஆக, தமிழ்மக்கள் இது விடயத்தில் செய்யக்கிடப்பது என்ன? சமாதானத்தை உண்மையான நோக்கம் கொண்ட சமாதானமாக தமது நலன்நோக்கி அதனை திருப்பவேண்டி காட்டமான எதிர்வினையை பிரயோகித்து முயற்சித்துப் பார்ப்பதே.

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக பேச்சில் கலந்துள்ள விடுதலைப்புலிகள் அதனையே செய்திருக்கின்றனர். அதுவன்றி வேறுவழி சமாதானத்தின் இலக்கை மறுதரப்பிற்கு உணர்த்த இருக்கமுடியாது.

பேச்சில் பங்குபற்றாது இடைநிறுத்தி அதேவேளை யுத்தநிறுத்தத்தை முழுமையாகக் கடைப்பிடித்து ஒரு கால அவகாசத்தை அதற்காக புலிகள் வழங்கியுள்ளனர். விடுதலைப்புலிகளின் இந்த நிலைப்பாட்டிற்கு காட்டமான எதிர்ப்புகளும் எழுகின்றன. சமாதானத்தின் இலாபம் எங்கெல்லாம் பங்கிடப்பட்டிருக்கின்றதோ அங்கெல்லாம் இருந்து எதிர்ப்புகள் கிளம்புவது இயல்பானதே. இலாப நோக்கம் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம் இருந்து விடுதலைப்புலிகளின் இந்த



நியாயபூர்வமான நிலைப்பாட்டை புரிந்து கொள்ள முடிவதும் இயல்பானதே.

நெடுந்தீவுக் கடலில் கடற்படையின் செயலால் போராளிகள் மூவர் தற்கொலைபுரிய நேர்ந்தபோதும், பின்னர் மானிப்பாயில் வைத்து நிராயுதபாணிகளான பெண்போராளிகளை ஆயுதப்படையினர் மிருகத்தனத்தோடு தாக்கியபோதும், எல்லாவற்றிலும் மேலாக சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டு போராளிகள் கொலையுண்டபோதும் அத்தகைய கொதிப்பூட்டும் செயல்களையெல்லாம் புலிகள் பொறுத்து சமாதானத்தை பாதுகாத்தனர்.

அப்போதெல்லாம் புலிகள் பேச்சை இடைநிறுத்தவில்லை. ஏனெனில் சமாதானம், தீர்வு என்பது தமிழ்மக்களுக்குரியதொன்று. அந்த சமாதானத்தை பேணுவதற்கு தியாகங்கள் புரிய நேர்ந்தது. அவமானங்களைப் பொறுக்க நேர்ந்தது. இவையெல்லாம் தமிழ்மக்களின் நலன்களை பாதுகாப்பதற்கான அபரிமிதமான பொறுமைகள்.

ஆனால் மக்களை தம் வீடுகளில் குடியிருத்துவதை இராணுவப் பிரசன்னத்தால் நிறைத்து மறுதலிக்கும்போது அதில் பொறுமையோடிருப்பது தமிழ்மக்களின் நலன்களை எந்த வகையில் பெற்றுத்தரும்?

யுத்தத்தால் சிதிலமாகிப்போன மக்களின் வாழ்விற்கு புனர்வாழ்வளிப்பதற்கான ஒரு அதிகார அலகைத்தானும் தற்காலிகமாக அங்கிகரிக்க மறுக்கும் போது புலிகள் சமாதானத்தில் பங்குபற்ற வேண்டியது யாருக்காக?

சமாதானத்தின் ஆரம்பப் பேச்சுகளில் இணக்கம் கண்டு உடன்பட்டவற்றை ஒரு வருடமாக நடைமுறைப்படுத்த அரசு விளையாதபோது சமாதானப் பேச்சை தொடர்வதுதான் எதற்காக?

சமாதானப்பேச்சின் நன்மைகள் தமிழ்மக்களுக்கென்றிருந்தபோது அதனை எல்லாவற்றிற்கும் மேலாய் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு புலிகளுக்கிருந்தது. அதுவே தமிழ்மக்களுக்கு எதையும் தராதபோது அதனைப் புறக்கணிக்க வேண்டிய கடப்பாடும் புலிகளுக்கே இருக்கிறது. ●

# உன்னதமான நிகழ்வு



20.04.2003 அன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் ஒரு உன்னதமான நிகழ்வு நடந்தேறியது. அன்றைய நாளில், ஒடுக்குமுறைக்குட்பட்ட தமிழினத்திற்கு தனது ஐம்பதுவருட வாழ்வை அர்ப்பணித்து மருத்துவப்பணியாற்றிய வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களையும் அவரது பொது வாழ்விற்குத் துணைநின்ற குடும்பத்தினரையும் தமிழீழ தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் சந்தித்து நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவித்திருந்தார்.

உண்மையில் வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களின் மருத்துவப்பணி உன்னதமானது. விடுதலைக்குத் தீக்குளித்த எமதினத்தின் எல்லாச் சுமைகளையும் தாங்கிக்கொண்டு, அதனுள்ளேயே வாழ்ந்துகொண்டு மக்களுக்கு அவர் ஆற்றிய, ஆற்றிவரும் பணி உயரியது. அவர் தனக்காகக் கிட்டிய ஆடம்பர வாழ்விற்கான வாய்ப்புகளையெல்லாம் உதறியெறிந்துவிட்டு மனிதத்துவத்துடன் தன் மக்களுக்கு பணியாற்றினார்.

இரண்டாம் ஈழப்போர் காலத்தில் யாழ்.குடாநாடு சிங்களத்தின் கொடிய முற்றுகைக்குள் சிக்கியிருந்தது. கொடுமைகளின் காலமது. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் முற்றுகையை உடைக்கும் முக்கியத்துவமான சமர்கள் எம்மால் நிகழ்த்தப்பட்டன. கோட்டைச்சமர், ஆ.க.வெ, யாழ்தேவி முறியடிப்புச்சமர், தவளை நடவடிக்கை என பெரும் சமர்கள் நடந்து நூற்றுக்கணக்கான போராளிகள் விழுப்புண் அடைந்தபடி தினமும் மருத்துவமனைக்கு வந்து சேருவார்கள். அத்தகையதொரு நெருக்கடி மிகுந்த காலத்தில் ஓய்வுபெற்ற நிலையிலும் யாழ் குடாநாட்டிலேயே தங்கியிருந்து மருத்துவ கலாநிதி கெங்காதரன் அவர்கள் மக்களுக்கும், போராளிகளுக்கும் சேவையாற்றினார்.

மூன்றாம் ஈழப்போர் காலம். முக்கியமான திருப்பங்களின் காலம். அப்போது அவர் தனது மானுட வாழ்வில் ஏழு தசாப்தங்களை நிறைவு செய்திருந்தார். மருத்துவப் பணியில் இருந்து மட்டுமல்ல மானுட வாழ்வில் இருந்தே விடைதேடும் வயது அது. ஆனால், போரில் திருப்பம் நிகழ்ந்து போராட்டம் வன்னித் தளத்திற்கு இடம் பெயர்ந்தபோது மக்களோடு மக்களாக, போராளியோடு போராளியாக மருத்துவக் கலாநிதி கெங்காதரன் அவர்களும் தனது குடும்பத்தவரோடு வன்னிக்கு வந்து சேர்ந்தார். அபாயகரமான மருத்துவப் பிரச்சினைகளை எதிர்கொண்ட வன்னிப் பெருநிலத்தில் மகத்தான பணிபுரிந்தார். முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி ஊறாக பெருநிலம் எங்கும் இடையறாத சேவையை மக்களுக்கு ஆற்றினார். தொடர்ச்சியாக இடப்பெயர்வுகளைச் சந்தித்து மாறி மாறி நோய்களால் வதையுண்ட நிலையில் மக்கள் வாழ்ந்தபோது அவர் ஆற்றிய மருத்துவப்பணி எவராலும் மறக்கப்படக்கூடியதல்ல.

மக்களுக்காக சேவையாற்றியது மட்டுமல்லாது, எப்போதும் நூற்றுக்கணக்கான போராளிகளை சராசரியாகக் கொண்டிருந்த போர்மருத்துவமனைகளிலும் அவர் சேவையாற்றினார். முக்கியமாக போராளி மருத்துவர்களுக்குத் தனது அறிவையும் அனுபவத்தையும் ஊட்டி வன்னியின் மருத்துவமனைகளிலும், போர்க்களங்களிலும் இருந்த மருத்துவப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் தலைவரின் திட்டத்திற்காக உழைத்தார்.

வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்கள் தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டதை அறிந்ததும் ஒரு போராளி இவ்வாறு தனது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார். "நான் அம்மாவின் வயிற்றில் இருந்தபோது கெங்காதரன் டொக்டர்தான் அம்மாவிற்குப் பிரசவம் பார்த்தது. பிறகு ஆனையிறவுச் சண்டையில நான் காயப்பட்டு காலுடைந்து கிடந்தபோது வைத்தியம் செய்ததும் அவர்தான். இப்போது எனக்கு அவர் பிரசவமும் பார்க்கப்போகிறார்."

இவ்வாறு வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களின் மருத்துவப் பணி பற்றி இந்த மண்ணில் 'ஆயிரம் ஆயிரம் மக்களும், போராளிகளும் தமது நினைவுகளைப் பகிர்வர். தனது ஐம்பதுவருட சேவைக்காலத்தில் அவர் அத்தனை உன்னதமான சேவைகளை ஆற்றியிருக்கிறார். தற்போதும் தன்னால் இயன்றவரை ஆற்றி வருகிறார். அவரது ஐம்பதுவருட சேவைக்கால நிறைவு நாளில் சில பொழுதுகள் தலைவர் அவர்களும் கலந்துகொண்டு நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்ததை எண்ணி தமிழீழ தேசமும், விடுதலைப்புலிகள் இயக்கமும் பெருமகிழ்வு அடைகிறது. அவர் இனியும் நலமோடு வாழ வாழ்த்துகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY 2003

# ஒரு போராளியின் கடிதம்

வன்னிப்பெருநிலம்,
12/05/1999.

என்றும் என் அன்பு நிறைந்த அம்மா அப்பா அம்மம்மா உங்களுக்காய் அன்பு மகன் நான் எழுதிக்கொள்வது.

எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் எங்களை வளர்த்தெடுத்தீர்கள். எங்களை வளர்த்து ஆளாக்குவதற்காக நீங்கள் பட்ட கஸ்ரங்களைத் தெரியாதவர்கள் அல்ல நாங்கள். எனினும் ஏதோ ஒரு தேவையின் பொருட்டு நாங்கள் பிரிந்து போனபோது உங்களைத் துன்பப்படுத்த நேர்ந்துவிட்டது. அதற்காய் எங்களை மன்னித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

அம்மா! நீங்கள் அடிக்கடி கூறுவது என் ஞாபகத்திற்கு வருகிறது "எங்கை இருந்தாலும் நல்லா இருந்தா சரி" என்று. அதற்காக நாங்கள் எங்காவது நல்லாயிருந்துகொண்டு உங்களை தனித்து தவிக்கவிட நாங்கள் ஒன்றும் பாசமில்லாத பிள்ளைகள் அல்ல.

எங்களை வளர்த்து ஆளாக்கவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு எப்படி இருந்ததோ அதேபோலத்தான் உங்களை எந்தவொரு குறையும் விடாமல் பார்க்கவேண்டும் என்ற ஆசை எங்களுக்கும் இருந்தது. உங்களைப் பிரிந்து இயக்கத்துக்கென்று வந்தபோது நீங்கள் மட்டும் கவலைப்பட்டிருக்க நாங்கள் சந்தோசமாக இருக்கவில்லை. நாங்களும் கவலைப்பட்டோம். பிரிய நினைத்தபோதும், இறுதியில் பிரிந்தபோதும் உங்களுக்கு இருந்ததுபோலவே எங்களுக்கும் நெஞ்சு வெடிக்கும்போல் இருந்தது.

இத்தனைக்கும் பின்பும் நாங்கள் ஏன் உங்களைப் பிரிந்தோம்? நாங்கள் போகுமிடம் ஒன்றும் சொர்க்கபுரியல்ல என்பதும் உங்களுக்குத் தெரிந்ததுபோலவே எங்களுக்கும் தெரியும். நன்றாயிருப்பதற்கான பிரிவுகளின்போதே மனித உறவுகள் எவ்வளவு துன்பப்படுகின்றன என்பதனைப் பார்த்தும் அனுபவித்தும் இருக்கிறோம். அப்படியிருக்க இப்படியான பிரிவுகள் எத்துணை கொடுமையானது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியாதது அல்ல.

நீங்கள் நினைக்கலாம், எத்தனையோ பிள்ளைகள் போராட்டச் சிந்தனையே இன்றி இருக்க எங்களுக்கு மட்டும் ஏன் இந்தத் தேவையென்று. அந்தக் கேள்வியை மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலமையில் எங்களுக்கே திருப்பிக் கேட்டுப்பாருங்கள். அந்த நேரத்தில் யார் யாரோ போராட நாங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டுதானே இருந்தோம். இப்போது யோசித்துப் பாருங்கள் அந்த நாட்களில் நாங்கள் எவ்வளவு சுயநலக்காரர்களாய் வாழ்ந்தோம் என்று. இப்போது நீங்கள் கண்ணீர் விடுவதுபோல் அப்போது யார் யாரோ தாய்மார்கள் எல்லாம் கண்ணீர்விட நாங்கள் மட்டும் எங்கள் எதிர்காலங்களைப்பற்றி மட்டுமல்லவா சிந்தித்துக்கொண்டிருந்தோம். அது எவ்வளவு கொடுமையான சுயநலம் என்பதை நாங்களும் அனுபவித்த பின்னர்தானே தெரிகிறது.

அம்மா! மற்றவர்களைப் பார்த்து நாங்களும் நடக்கக்கூடாது. எங்கள் ஒவ்வொருவரையும் நீங்கள் சுயநலக்காரர்களாக வளர்க்கவில்லை. மற்றவர்களைச் சுரண்டி எங்களை நன்றாக வாழும்படி நீங்கள் எப்போதாவது சொல்லித் தந்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் எங்களைச் சுயநலக்காரர்களாக வளர்க்காததால்தான் நாங்கள் இப்படியொரு முடிவை எடுத்தோம். சுயநலக்காரர்கள் இல்லாத உங்கள் பிள்ளைகளால் இந்தக் காலகட்டத்தில் இதைத்தவிர வேறு எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை. அப்படி இல்லாவிட்டால் குற்ற உணர்வுடன் நடைபிணங்களாகத்தான் எங்கள் வாழ்வைக் காலம் முழுவதும் கழிக்கவேண்டியிருக்கும். அதை என்றைக்குமே நீங்கள் விரும்பியதில்லைத்தானே. "என்ர பெடியள் நாலுபேருக்கு முன்னால தலைநிமிர்ந்து நடக்கவேணும்" என்றுதானே அப்பா அடிக்கடி சொல்லுவார். அப்பாவின் ஆசை நிறைவேறவேண்டுமானால் இன்றைய நிலையில் நாங்கள் போராடித்தான் ஆகவேண்டும்.

ஆம்மா! நாங்கள் இயக்கத்துக்குப் போனவுடன் ஏதோ வாழ்க்கையையே இழந்துவிட்டோம் என்பதுபோல் கவலைப்பட வேண்டாம். எங்களுக்கென்றதொரு காலம் விரைவில் மலரும். அந்தக் காலத்தில் நாங்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றுசேர்ந்து சந்தோசமாக வாழுவோம் என்று நம்பியிருப்போம். நாங்கள் தலைநிமிர்ந்து நடக்கும் அந்தக் காலத்தை நீங்கள் சந்தோசமாக இருந்து பார்க்கவேண்டும். அதற்காக, கவலைகளால் உடம்பைப் பாழாக்குவதை விட்டுவிட்டு சந்தோசமாக இருங்கள். அப்பாவையும், அம்மம்மாவையும் பக்குவமாக பாதுகாத்து வைத்திருங்கள். இயற்கையின் நியதியாய் ஏதும் நடந்துவிட்டால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. அதை ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள் வாழத்தானே வேண்டும். நீங்கள் சந்தோசமாக இருப்பதைப் பார்ப்பதால் மட்டும்தான் எங்களால் சந்தோசமாக இருக்கமுடியும்.

நாங்கள் ஏதோ தொலைவில் இருப்பதாக நினைக்கவேண்டாம். வீட்டில் இல்லாவிட்டாலும் உங்கள் அருகில்த்தான் இருக்கிறோம். உங்களுக்கு ஏதும் என்றால் ஓடிவரக்கூடிய தூரத்தில்தான் இருக்கிறோம். கவலைப்படாமல் இருங்கள். அப்பாவை கவலைப்படாமல் வைத்திருங்கள்.

தம்பி! குழப்படியில்லாமல் எல்லோரையும் கவனமாகப்பார். எங்களிலும் பார்க்க நீதான் நாட்டுக்குச் சேவை செய்கிறாய். நீ வீட்டில் இருப்பதால்தான் நாங்கள் ஏதோ செய்யக்கூடியதாய் இருக்கிறது. இந்தப் பெருமைகளெல்லாம் உனக்குத்தான். சந்தோசமாய் இரு. காலம் வரும்போது ஒன்றுசேர்ந்து மகிழ்வாய் வாழுவோம். அம்மம்மா! உங்களுக்கு வயது போகமுன்னர் நாங்கள் வந்துவிடுவோம். கவலைப்பட வேண்டாம்.

நன்றி

இப்படிக்கு,
உங்கள் பாசமுள்ள மகன்
மஜூசங்கர்



புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org